# தென்மொழி


## வெற்றிக்கொடி நாட்டு!

அருமைத் திராவிடத் தம்பி—பல
அரசியல் கட்சிகளை நம்பி—நீ
அலைந்த அலை போதும்;
நடந்த நடை போதும்;
அமைவாய் ஒருபுறம் குந்தி—இனி
அடுத்த முயற்சியினைச் சிந்தி!

அன்புடைத் தமிழின மறவ!—உனை
ஆண்ட தலைவர்களின் உறவால்
அடைத்த பழி போதும்;
மிடைந்த துயர் போதும்;
ஆழ நினைந்து வினை தொடங்கு—நீ
அற்றைத் தமிழ்மறத்தின் மடங்கு!

விடுதலை விரும்பிடும் புலியே—உனை
விடுத்தனர் தலைவர்கள் தனியே!
வேகம் தளராமல்
வெம்மை குளிராமல்
வீரநடையில் படைகூட்டு!—தமிழ்
வெற்றிக்கொடியை இங்கு நாட்டு!





சுவடி : 16.
ஓலை : 8.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1 உருபா.

# நமக்கு வந்த மடல்கள்.

**0:672:** 'சாலை'க்குத் தாங்கள் வரைந்திருந்த விடை அவருக்கு நல்ல அறிவுறுத்தலாக இருக்கும். தம் தவற்றுக்கு அவர் வருந்துவார் என்றே எதிர்பார்க்கின்றேன்.

—க. **தமிழமல்லன்**, புதுச்சேரி-9.

**0:673:** பெருமதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு தங்களின் அன்பு மாணவன் கு. இராசேந்திரன் வணக்கமாய் எழுதுவது. ஐயா, தென்மொழிக்கு ஐந்து புதிய உறுப்பினர்களைச் சேர்த்து அனுப்பியுள்ளேன். பல்கலைக் கழகம் திறந்தவுடன் என்னுடைய உயிர்ப் பணியாகத் தென்மொழிக்கு மிகப் பல உறுப்பினர்களை சேர்த்தனுப்புகின்றேன். என் வாழ்நாளில் பெரும்பொழுது தங்களின் தமிழ்ப் பேரறிவை நினைவதும் நினைந்து மகிழ்வதும் பிறர்க்கு உரைப்பதுவுமாகவே அமையும். இத்திங்களுக்குரிய தென்மொழியின் அட்டைப் பாடலும் ஆசிரியவுரையும் மிக அருமையாக அமைந்துள்ளன... இனிமேல் இவர்களை யெல்லாம் எள்ளளவும் நாம் நம்பக்கூடாது. தங்களின் தூய ஆசிரியவுரை எவ்வளவு ஆழஞ் சான்றது! எவன் அதைப்பற்றி யெல்லாம் கவலைப்படுகின்றான்? தாங்கள் இதற்கு மேலும் இந்த இழிவுபட்ட தமிழினத்திற்கு ஏற்றதொரு வழியை உடனடியாகக் காட்டியாகல் வேண்டும். தங்களைத் தவிர இம்மண்ணில் வாழும் எந்தத் தலைவனுக்கும் இனிமேல் இந்த இனத்தைப் பற்றிப் பேசுதற்கு அருகதை கிடையாது. ஐயா தங்களின் தூய தனித் தமிழ்த் திருப்பணி என்றும் தொடரட்டும். அன்பு மாணவத் தம்பி,

—கு. **அரசேந்திரன்**, க. மு. ஆராய்ச்சி மாணவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.

**0:674:** ஐயா, தமிழ்ச்சிட்டு, தென்மொழியின் பழைய படிகள் இன்னும் விற்பனையாகாமல் இருப்பது அறிந்து வருந்துகிறேன். என் செய்வோம்? கால நிலை அப்படி! இயற்கையாற்றல் எல்லாருடைய கணக்கையும் பதிவு செய்து வருகிறதை அறிவீர்கள். எனவே, தளராமல் உழைக்கப் பணிவுடனும் அன்புடனும் உணர்வு ஒத்த நண்புடனும் வேண்டுகிறேன். அன்பன்,

—ச. **தமிழ்வேலன்**, கோட்டூர், தஞ்சை.

**0:675:** வணங்கற்குரிய பாவலரேறு ஐயா அவர்கட்கு மதுரை மா நகரினின்று தமிழ்ச் சிறுவன் வரையும் முதன் மடல் :

தாங்கள் தமிழின் வாழ்விற்குச் செய்து வரும் பணிகளைக் கண்டு விம்மிதமுறுகிறேன். தென்மொழி'யினைச் சில திங்கள்கட்கு முன்பே, நான் காணலுற்றேன். 'மெல்லத் தமிழினிச் சாகும்', என்றெண்ணியிருந்த எனது மனத்திலே இப்பொழுது, ஓர் உறுதியேற்பட்டுள்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

# பெருஞ்சித்திரனார் பாடல்கள்
# கனிச்சாறு
## வெளியீட்டு விழா - சென்னை

தி.பி.2010 துலை 25 (11-11-1979) ஞாயிறு



## அழைப்பிதழ்.

பேரன்புடையீர்,

நிகழும் திருவள்ளுவராண்டு உ0க0, துலை மாதம் உரு (11-11-1979)-ஆம் பக்கல், சென்னை, அண்ணாசாலையிலுள்ள நடுவண் நூலகப் பேரரங்கில், தென்மொழி ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகப் பல இதழ்களிலும் எழுதி வெளிவந்த தனிப் பாடல்களின் தொகுப்புகள் ஆகிய,

**பெருஞ்சித்திரனார் பாடல்கள் -கனிச்சாறு**

**முதல் தொகுதி, இரண்டாம் தொகுதி, மூன்றும் தொகுதி**

-என்னும் மூன்று நூல்களின் வெளியீட்டு விழா சிறப்புடன் நடைபெறவிருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவ்விழாவில் தாங்களும் தங்கள் குடும்பமும் நண்பர்களும் தவறாமல் கலந்துகொண்டு, விழாவைச் சீரும் சிறப்புமாக நடத்திக் கொடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

விழாக்குழுவினர்

1) தென்மொழி **ந. முத்துக்குமரன்** அறி.இ., பல்லடம்.
2) தென்மொழி **ப. துரையரசன்** க இ., அவிநாசி.
3) தென்மொழி **மறை. நித்தலின்பன்**, சென்னை.
4) புலவர் **இறைக்குருவனார்**, சென்னை.
5) **குமர. நடவரச ஈவப்பன்**, சித்தோடு.
6) தமிழூர் **ப. அருளி**, வணி.இ.,ச.இ., புதுவை.
7) **கோட்டை இராவணன்** க.மு., சாத்தூர்.
8) புலவர் **தி. நா. அறிவுஒளி** க மு., திருக்கழுக்குன்றம்.
9) **மா. பூங்குன்றன்** அறி.இ.,க.மு.,, சென்னை.
10) **செம்பியன் வல்லத்தரசு**, க.இ., சென்னை.
11) **மருத்துவர். கோவிந்தனார்** (திரைப்பட இயக்குநர், சென்னை.)
12) தென்மொழி **தமிழமல்லன்** க இ., புதுவை.

# வெளியீட்டு விழா

## நிகழ்ச்சி நிரல்

இடம் : சென்னை, நடுவண் நூலகம் விழாப் பேரரங்கம்

காலம், நேரம். 11—11—1979 ஞாயிறு காலை 9-30 முதல் இரவு 9 மணி வரை

### காலை நிகழ்ச்சி

நேரம் : காலை 9-30 முதல் பகல் 2 மணி வரை

**தலைமை அமர்த்தஉரை :** தென்மொழி **ப. துரையரசன்** க. இ.

**இறை வணக்கம் :**

**தமிழ்த்தாய் வாழ்த்து :**

**வரவேற்புரை :** தென்மொழி **ந. முத்துக்குமரன்,** அறி. இ.

**தலைமையுரை :** பேரா. பர். க. த. திருநாவுக்கரசு, க. மு.
(உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை).

**'கனிச்சாறு' அறிமுகவுரை :**
**தென்மொழி மறை. நித்தலின்பன்.**

**வெளியீடு:** **தலைவர்**

**ஏற்புரை :** பேரா. பர். கோ. தங்கவேலனார்,
க. மு., ச. இ; இல. இ.
(தமிழ் நில வரலாற்று நூலாசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை.)

### திறனாய்வரங்கம்

**தலைப்பு : பெருஞ்சித்திரனார் பாடல்களில்...**

1) **தமிழ் :** **புலவர் இறைக்குருவனார்,**
(நூலாசிரியர், உரையாசிரியர்)

2) **இந்தி எதிர்ப்பு :** தென்மொழி **க. தமிழமல்லன்,** க. இ.
(அமைப்பாளர், தனித் தமிழ்க்கழகம், புதுவை)

3) **இன எழுச்சி :** புலவர். **தி. நா. அறிவுஒளி,** க. மு.
(கட்டுரையாசிரியர், திருக்கழுக்குன்றம்.)

4) **நாட்டுணர்ச்சி :** **அரு. கோபாலன்,**
(இதழாசிரியர், 'மருமம்' சென்னை.)

5) **பொதுமை :** பேரா. **பசுபதி,** க. மு.
(தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி)

6) **இளைய தலைமுறை:** இலக்கணப்புலவர். **த. ச. தமிழனார்**
(அமைப்பாளர், இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்)

7) **காதல் :** தமிழூர் **ப. அருளி,** வணி இ; ச. இ.
(நூலாசிரியர், புதுவை)

8) இயற்கை : பேரா. **தமிழ்க்குடிமகனார்,** அறி.இ;க.மு.
(முதல்வர், யாதவர் கல்லூரி, மதுரை)

9) இறைமை : **கதிர். தமிழ்வாணன்,**
(அமைப்பாளர், உலகத் தமிழ்க் கழகம், குடந்தை)

(காலை நிகழ்ச்சி முடிவு—இடைவேளை)

## பிற்பகல் நிகழ்ச்சி

நேரம் : பிற்பகல் 4 முதல் இரவு 9 வரை.

### சிறப்புரை

பர். ஔவை. து. நடவரசன், க. மு.
(இயக்குநர், மொழி பெயர்ப்புத்துறை (பொது) தலைமைச் செயலகம், சென்னை)

பன்மொழிப்புலவர், பேராசிரியர். இரா. மதிவாணன், க. மு.
(துணையாளர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்துறை, சென்னை)

பர். இரா. இளவரசு, க. மு.
(பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை)

### பாராட்டுரை

சிலம்பொலி செல்லப்பனார், க. மு; ப. இ.
(தனி அலுவலர் (ஆளுமை), தமிழ் வளர்ச்சி இயக்கம், சென்னை)

பன்மொழிப் புலவர். பேரா. மு. சதாசிவனார், க. மு.
(அகரமுதலித் தொகுப்பாளர், பன்னூலாசிரியர், வாசவி கல்லூரி, ஈரோடை)

பேரா. கு. வெ. கி. ஆசான், க. மு. (மெய்), க மு. (வர), க, மு (அர), க. மு. (பொருள்), ச. இ.
(பன்னூலாசிரியர், முதல்வர், 'கல்வியகம்'—கோவை)

### வாழ்த்துரை

பர். சி. பாலசுப்பிரமணியனார், க. மு., இல. மு;
(பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர், உறுப்பினர், பேரவை, கல்வி அவை, உறுப்பினர், தமிழ்ப் பாடத் திட்டக்குழு (பொது, தேர்ச்சி) சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை. உறுப்பினர், தமிழ்ப்பாடத் திட்டக் குழு, அண்ணாமலை, கேரள, பெங்களூர், திருவேங்கடவன் பல்கலைக் கழகங்கள்)

**மறைமலையடிகள் மகனார், தொண்முடிபு ஞாயிறு**
பேரா. மறை. திருநாவுக்கரசு.

நன்றியுரை

வெளியீட்டு நன்றியுரை :
திருவாட்டி. **தாமரை பெருஞ்சித்திரனார்**

விழா நன்றியுரை :
கோட்டை. **இராவணன்**, க. மு.

தமிழின ஒருமைப்பாடல் :
தென்மொழி. **ந. இளமாறன்**, பொறி. சான் இ.

## விழா அமைப்பாளர்கள்

**பாவலர் குமர. நடவரச ஈவப்பனார்**
**மா. பூங்குன்றன், அறி. இ; க. மு.**
**மா. கதிர்சிவன்**
**தென்மொழி ப. முருகவேள், அறிவொளி.**

---

## **"கனிச்சாறு"** நூல்கள் விலை

| | |
|---|---|
| முதல் தொகுதி | *15 - 00* |
| இரண்டாம் தொகுதி | *11—50* |
| மூன்றும் தொகுதி | *17—50* |

o **விழாவரங்கில் மூன்று தொகுதிகளும் 35 உருபா விலைக்குக் கிடைக்கும். விழாவரங்கில் குறைந்தது பத்து தொகுதிகள் வாங்கும் விற்பனையாளர்களுக்குச் சலுகை விலையில் 10 விழுக்காடு கழிவும் கொடுக்கப்பெறும்.**

o விழாவரங்கில் ஆசிரியரின் பிற நூல்களும் விற்பனைக்குக் கிடைக்கும்.

o **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** பழைய படிகள் சலுகை விலையில் கிடைக்கும்.

o விழாவரங்கில் பிற விற்பனையாளர் நூல்களை விற்பனை செய்ய விரும்புவார் முன்பணம் **10** உருபாவுடன் முன்கூட்டியே **விழாக்குழு, மே/பா. தென்மொழி, சென்னை-5** என்னும் முகவரிக்கு எழுதி இசைவு பெறுக.

---

விழா நிகழ்ச்சிகள், உரைகள் அனைத்தும் படங்களுடன் நூல் வடிவம் பெறும்.

கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!





# தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி: 16 ஓலை 8.
[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]
துலை. தி. பி. உ௰௯௰-
அக்-நவ 1979.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்.
ஆசிரியர்: மா. பூங்குன்றன். அறி.இ; க.மு;
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
கலைக்கோயில் மாணிக்கப் (சிங்கை)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்,
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன']


## இக்கால் உள்ள தமிழ் உண்மைத் தமிழ் அன்று!



தமிழ் மொழியைச் சிறப்பாகக் கற்றவர்களைப் பற்றி, அம்மொழியைச் சிறப்பாகக் கல்லாதவர்களிடம் ஒரு தவறான கருத்து உண்டு. "அவர்களுக்குத் தமிழ் தவிர வேறு ஒன்றுந் தெரியாது. தமிழிலோ ஒன்றுமே இல்லை; அறிவியல் இல்லை; பொருளியல் இல்லை; உயர்ந்த நாகரிக வாழ்க்கைக்கான புதுமைக் கூறுகள் இல்லை. எனவே வெறும் தமிழ் மட்டுமே கற்றவர்கள் பழமை விரும்பிகள்; கிணற்றுத் தவளைகள். அவர்கள் கருத்துக்கு அத்துணை மதிப்பளிக்கக் கூடாது'' என்பது அவர்கள் கருத்து. இக்கருத்தை ஒருவாறு சரி என்று ஒப்புக்கொள்ளும் வகையில், தமிழ்மொழியை நன்கு கற்ற தமிழாசிரியர்கள் சிலர், தமிழ்மொழியை மட்டுமே படித்தவர்களாக

வும், கம்பராமாயணம், வில்லி பாரதம், திருவிளையாடல் புராணம், சீவக சிந்தாமணி, நளவெண்பா ஓரளவு சிலப்பதிகாரம், திருக்குறள் — முதலிய இலக்கிய நூல்களை மட்டுமே அறிவு நூல்கள், கற்க வேண்டிய நூல்கள், அவையே உலகம் என்று கருதுபவர்களாகவும் இருந்து வருகிறார்கள். இந்த இரு சாராரின் தவறான கருதுதல்களை ஓரளவு போக்கி, இரு தரப்பிலும் சில உண்மை நிலைகளை உணர்த்துதலே இவ்வுரையின் தலையாய நோக்கம். தமிழ்மொழி பற்றிய தாழ்ச்சி, உயர்ச்சி நிலைகளை ஒருவாறு சமநிலைப் படுத்துவதற்கும், அம் மொழி மேம்பாடு குறித்த உண்மையான அறிவியல் நோக்கைத் தெரிந்து தெளிவதற்கும் இக்கட்டுரை பயன்படும் என்று எண்ணுகின்றோம்.

முதலில், தமிழ் கற்றவர்களுக்குச் சில கருத்துகளை வெளிப்படையாகச் சொல்லிக் கொள்ளுதல் நலம் பயக்கும் என்று கருதுகின்றோம். தமிழ்மொழி ஒன்று மட்டுமே உலகம் ஆகாது, என்பதை அவர்கள் நன்றாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இனி, வெறும் தமிழுக்காக மட்டுமே தமிழைப் படிக்கக் கூடாது. தமிழை மட்டுமன்று, வேறு எந்த மொழியையும், அதற்காக மட்டுமே படிக்கக் கூடாது. குறிப்பாகத் தமிழாசிரியர்கள் சிலர் தமிழ்மொழியை, அதிலுள்ள ஒரு சில இலக்கிய இலக்கண நூல்களைப் படித்த மட்டிலேயே, தங்களுக்குப் பிறரைக் காட்டிலும் சிறிது அறிவு கூடுதலாக வந்து விட்டதாகவும், பிறரைக் காட்டிலும் தாங்கள் மட்டுமே பயனுடைய வாழ்க்கை வாழ்வதாகவும், தமக்குத் தெரிந்த அளவு பிறருக்கு ஏதும் தெரியாது என்பதாகவும் எண்ணிக் கொள்வது போல் தெரிகிறது. இன்னும் சிலர் தமிழ் கற்ற மமதையில் ஆங்கிலம் கற்றவர்களையோ அறிவியல் கற்றவர்களையோ ஒன்றுந் தெரியாதவர்கள் என்று நினைத்துக் கொள்வதுபோல் தெரிகின்றது. இஃது, இங்குள்ள சிவனிய மதத்தைச் சார்ந்தவர்கள், ‘உலகில் மக்கள் வேறு எந்த நாட்டில் பிறந்தாலும் துறக்க(மோட்சம்) மில்லை; தென்னாட்டில் பிறக்க வேண்டும்; சிவாகம நூல்களைக் கற்கவேண்டும்; சிவ அறிவு வாய்க்க வேண்டும்; சிவவொழுக்கங்களைக் கைக்கொள்ள வேண்டும்; சிவ நினைவுடனேயே உயிர்விடல் வேண்டும்’, அப்பொழுது — தான் ஓருயிர் துறக்கம் எய்தும் என்று கருதுவது போல், ஒரு **தற்சார்புயர்வு**க் கருத்தாகும். அஃதாவது ‘தான் சார்ந்த கருத்தே உயர்ந்தது; பிறர் சார்ந்த கருத்தெல்லாம் அதைவிடச் சிறிது தாழ்ந்தது, என்று கருதும் ஒரு மனப்பாங்கு ஆகும். பொதுவாகச் சமயங்களைப் பொறுத்த அளவில், சிவனியத் தற்சார்புயர்வுக் கருத்துப் போலவே மாலியம், கிறித்துவம் முதலிய மதங்களும் கூட அக் கருத்துகளைப் போலவே, வேறு வகையான கருத்துகளைக் கொண்டிருப்பதை உணரலாம். ஆனால் மொழி நிலையைப் பொறுத்த அளவில், இத் தற்சார்புயர்வுக் கருத்து, வேறு எம்மொழியைக் கற்றவர்களை விடத் தமிழ்மொழியைக் கற்றவர்களிடம் கொஞ்சம் கூடுத

லாக, அஃதாவது பிறர் உண்மையான அறிவைக் காண்பதற்குத் துணை நில்லாத தன்மையில், இருப்பதாகத் தெரிகிறது. இதை ஒருவாறு **தமிழ்ச்செருக்கு** என்று கூடத் தனிப் பெயர் கொடுத்துக் கூறி விடலாம். ஆனால், இதே செருக்குத்தான், தமிழ் கல்லாத பிறர், அல்லது ஆங்கிலம், அறிவியல் முதலிய வேறு துறைகளில் கற்றவர்கள், வெறும் தமிழ்மொழியை மட்டும் கற்றவர்களை, 'ஒன்றுந் தெரியாதவர்கள்' என்று குறைத்து மதிப்பிடச் செய்து விடுகிறது என்று கூறினால் அது தவறாகி விடாது என்று கருதுகிறோம்.

பொதுவாகவே, தமிழ் ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால், இந்த உண்மையை உணர்ந்து கொண்டுதான் தமிழ் கற்றவர்கள் தங்களை உயர்வாக கருதிக் கொள்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. தமிழ்மொழியின் உண்மையான ஆற்றலை, வலிவை, அதன் இயற்கைத் தன்மையை, அறிவியல் கூறுகளை, மெய்யறிவியல் தெரிப்புகளை ஓரளவேனும் உணர்ந்து கொண்டவர்கள் மிக மிகக் குறைவானவர்களே. அதனை உணர்ந்தவர்கள் சிறிது தன்னடக்கமாகவே இருப்பார்கள் என்று கூடச் சொல்லி விடலாம். ஆனால் தமிழ்மொழியை மேலோட்டமாகப் படித்துவிட்டு—கற்று விட்டு என்று கூடச் சொல்ல முடியாது—படித்து விட்டு, அவர்கள் தருக்கிக் கொள்ளும் நிலை இருக்கிறதே; அதை உண்மையாகத் தமிழறிந்தவர்களாலும் கூட பொறுத்துக் கொள்ளல் இயலாது. அந்த அளவுக்கு அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வார்கள்.

கிறித்துவ மதத்தைச் சார்ந்தவர்கள் சிலரிடம், (அவர்கள் ஆங்கிலம் கற்றவர்களாகவே, அறிவியல் படித்தவர்களாக்வே இருப்பார்கள்) இவ்வுலகம் படைக்கப்படவில்லை; படிப்படியாகவே கூர்தலுற்றது; உயிர்களும் அப்படித்தாம். திடுமெனத் தோன்றிவிடவில்லை; படிப்படியாகவே தோன்றி வளர்ச்சியடைந்தது; நிலவுலகம் தோன்றுவதற்கு முன்பே கதிரவன் இருந்தது; அதற்கு முன்பே விண்மீன்கள் இருந்தன' என்றெல்லாம் கூறினால் நம்பவே மாட்டார்கள். அவர்களின் பைபிள் கொள்கைக்கு மாறாக எந்த டார்வினையும், ஐன்சுடீனையும் அவர்கள் ஒப்புக்கொள்ள அணியமாயில்லை. அந்த வகையில் ஐன்சுடீனை விடவோ, டார்வினை விடவோ, அவர்களுக்குப் பைபிளின் படைப்புக் கொள்கைதான் சிறந்தது, உயர்ந்ததாக இருக்கிறது. அது போலவே தமிழ் மட்டும் கற்றவர்களுக்கு, வேறு எவரையும் விடத் தாங்களே அறிவாளிகள் என்பதும், தாங்கள் படித்த கம்ப இராமாயணமும் வில்லி பாரதமும் திருவிளையாடல் புராணமுமே வேறு எவற்றினும் உயர்ந்த நூல்கள் என்பதும், ஓர் இயற்கையான மனவுணர்வாகப் போய் விட்டது. உண்மையிலேயே, மொழிநிலையைப் பொறுத்தமட்டில், தமிழில், இப்படிக் கருதச் செய்கின்ற மனவுணர்வை உண்டாக்கும் மொழியியற் கூறுகள் ஒன்றும்

இருப்பதாகக் கூறிவிட முடியாது. ஆனால் ஏனோ வெறும் தமிழ் மட்டும் படித்தவர்களிடையே இத்தகைய தற்சார்புயர்வுக் கருத்து—அது மட்டுமன்று, பிறர் சார்புத் தாழ்வுக் கருத்தும்—இருந்து வருகிறது; இஃது ஒரு கிணற்றுத் தவளை மனப்பாங்குதான். ஐயமே இல்லை.

ஆனால், அதற்காகத் தமிழ்ப் படித்தவர்கள் அனைவருமே கிணற்றுத் தவளைகள் ஒன்றுந் தெரியாதவர்கள் என்று கருதி விடுவதற்கில்லை; அப்படிக் கருதி விடவும் கூடாது. அப்படிக் கருதினால், அது நடுநிலையும் ஆகிவிடாது பெரியார் போலும் குமுகாய சீர்திருத்தக்காரர்கள், இப்படித் தமிழ் கற்றவர்களை வைத்தே, தமிழையும் குறைத்து மதிப்பிட்டார்கள். ஆனால், அஃது அவர்களுடைய பிழை மட்டுமே என்று கூறிவிட முடியாது. பெரியார் அப்படிக் கருதுவதற்குத் தமிழ்ப் படித்த புலவர்களும் ஒருவகையில் கரணியமாக இருந்தார்கள் என்றே சொல்லுதல் வேண்டும். இதை நடுநிலையாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் மறுக்க முடியாது.

கம்ப இராமாயணமும் வில்லி பாரதமும், திருவிளையாடல் புராணமும் வெறும் இலக்கிய நூற்கள் மட்டுமே! **அஃதாவது கற்பனையும், கருத்தும் உண்மையான வாழ்க்கைக் கூறுகளுடன் கலந்து, ஒரு புத்தம் புதிய நிறைவான கொள்கை வாழ்க்கையை அமைத்துக் காட்டும் ஒரு நூலையே இலக்கியம் என்று சொல்லலாம்.** இதில் அறநெறி இலக்கியம் என்னும் பிரிவோ சுற்றி வளைக்காமல், நேரிடையாக வாழ்க்கைக் கொள்கைகளைச் சொல்வது. கதையிலக்கியமோ சுற்றி வளைத்தும், இலைமறை காயாகவும், அல்லது வெளிப்படையாகவும் தெய்வவியல் பொருத்தம் காட்டியும, அல்லது வாழ்வியல் பொருத்தங் காட்டியும் ஒரு கதை தழுவிக் கொள்கைகளைக் கூறுவது இராமாயண பாரதங்களோ கதையிலக்கியங்கள். இவற்றைப் படித்துவிட்டு, அதில் வரும் உறுப்பினர்களையும் அவர்களின் குறிக்கோள்களையும் மட்டும் கொண்டு, ஒரு கற்பனை உலகைத் தமக்கென்று படைத்துக் கொள்ளும் இலக்கியப் பூச்சிகளாகவே தமிழ்ப் புலவர்கள் பலர் வாழ்ந்து வருகின்றனர் என்று சொன்னால் அது மிகையாகாது. இந்த நிலையில், துல்லியமான அறிவியல் உலகை அவர்கள் உணரவே முடியாது. ஒருமுறை தமிழ்ப் புலவர் ஒருவரிடம் - (அவர் பல வகையில் பெரியார் பின்பற்றியும், பகுத்தறிவாளர் என்று தம்மைக் கூறிக் கொள்பவரும் ஆவர்.)—அவரிடம், அறிவியல் பற்றிச் சில கருத்துகளைக் கூற வேண்டி வந்தது. அப்பொழுது கதிரவன் ஒரு நெருப்புக் கோளம் என்கிறீர்களே! அஃது எப்படிப்பட்ட நெருப்பு, தெரியுமா' என்று கேட்டு, 'மிக்க சூடுமிகுந்த கனல் போன்ற, ஆவி போன்ற நெருப்பு, என்று கூறினோம். அவர் உடனே, 'இல்லவே இல்லை; அப்படி ஒரு நெருப்பு, இருக்கவே முடி

யாது, நாம் அடுப்பில் பார்க்கிறோமே, விறகுக் கட்டையால் ஆன கட்டி நெருப்பு, அதுபோல்தான் கதிரவனும் ஒரு கட்டி நெருப்பு' என்று தருக்கமிட்டார். இதை எதற்குச் சொல்கிறோம், வெறும் தமிழப் படித்தவர்களில் ஒரு சிலர் இராமாயணம், பாரதம் இவையே 'தமிழ்' என்று பழைமைக் கொள்கை பேசுகின்றனர். சிறிது பகுத்தறிவோடு தமிழ்ப் படித்தவர்கள் என்பவர்கள் அடியோடு, நம்பா மதக் கொள்கையராகித் தமிழைப் பற்றியும் சரியாகத் தெரிந்து கொள்ளாமல், அறிவியலையும் சரியாக உணராமல், ஒருவகை குழப்பக் கொள்கையினராக இருக்கின்றனர். இந்நிலையில் ஆங்கிலம் அல்லது அறிவியல் கற்றவர்கள் வெறும் தமிழ்ப் படித்தவர்கள் என்னும் வகையில் இரு திறத்தாரையும் அவமதிப்புச் செய்கிறார்கள்.

இனி, தமிழ் கற்றவர்கள் அனைவருமே கிணற்றுத் தவளைகள் அல்லர் என்பதை ஆங்கிலம், அறிவியல் கற்றவர்கள் தெளிவாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். பொதுவுடைமைக் கொள்கையினர், தங்கள் கொள்கையை ஒப்புக்கொள்ளாத அஃதாவது முழுமையாக ஒப்புக்கொள்ளாத—அனைவரையுமே முதலாளியக் கொள்கையினர், அஃதாவது பூர்சுவாக் கொள்கையினர் என்று கூறுவது போல, தமிழ் தெரிந்த அனைவரையுமே ஒன்றாகக் கருதும் மாற்றாந்தாய் மனப்பான்மை அகலவேண்டும். தமிழ்தான் இவ்வுலகத்தின் முதல் தனிச் செம்மொழி. இதைப் பல அறிவியல் துறைகளாலும் ஆய்ந்து பார்த்தாகி விட்டது. வலிவுள்ள கருவிகளால் இக்கருத்து சரிவரப் பரப்பப்படவில்லையாதலால், வலிவற்ற இதன் எதிர்நிலைக் கருத்துகளெல்லாம் இன்று கற்றவர்களிடமும், கற்ற நாடுகளிடமும் கொடிகட்டிப் பறக்கின்றன. ஆனால் தமிழியல் கருத்துகள் இக்கால் புத்துணர்வு பெற்று வலிவு தகைந்து உரமேறி வருகின்றன. எனவே 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று வெறும் இனிமை நோக்கி மட்டுமே, பாரதியார், தெரிந்தோ தெரியாமலோ, அரைகுறை மனப்பான்மையுடன் ஒப்புக்கொண்ட உண்மை, வேறு பல நிலைகளிலும் மிக மிக வலிவூட்டத்துடன், உலகமே ஒப்பி, வியந்து பாராட்டும் நாள் மிக விரைவில் வரத்தான் போகிறது. வெறும் தமிழ் மட்டுமே எப்படி வாழ்வாகி விடாதோ, அப்படி வெறும் அறிவியல் மட்டுமே வாழ்வாகிவிட முடியாது என்று அறிவியல் ஆரவாரக் கடல் நண்டுகளும் உணர்தல் வேண்டும்; உணரச் செய்தல் வேண்டும். அந்த முயற்சி நடந்து வருகிறது.

தமிழ் கற்றவர்கள் அறிவியலில் ஓரளவு சுன்னமாக, சுழியாக இருந்தாலும், அவர்கள் வாழ்வியலில் பல கூறுகளை. நுட்பங்களை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதில் உண்மையில்லை என்று கூறிவிட முடியாது. **அறிவியலும், உளவியலும் தோய்ந்து**

**படிந்து வளராத வாழ்வியலுக்குப் பல தோல்வி நிலைகள் உண்டு.** பாலைநிலம் போன்ற அவ் வெற்று வாழ்க்கையில் ஒரு வரட்சியைத் தவிர வேறு எதனையும் காண முடியாது. தமிழ்மொழி அவ்வரட்சியைப் போக்கிச் செழுசெழிப்பை, ஒரு குளிர்மையை உண்டாக்கித்தரும் வல்லமை சான்றது. அறிவியலையே வாழ்வியலாக மாற்றி மெய்யறிவியலாக உயர்த்தி, மீமிசை மாந்த வாழ்க்கையை உருவாக்கித் தரத் தமிழினும் சிறந்த ஓர் இயற்கை மொழி இவ்வுலகெங்கினும் இல்லை. இதனை உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஆனால், இன்றைய நிலையில் அந்த உண்மைத் தமிழைக் கற்க முடியாதவர்களாக, இயலாதவர்களாக நாம் இருக்கின்றோம் என்பதையும், ஒருவகைப் **போலித் தமிழையே 'தமிழ்'** என்ற பெயரில் படித்து வருகின்றோம், அல்லது பேசி வருகின்றோம் என்பதையும் உணர்தல் வேண்டும். உண்மைத் தமிழ், தூய தமிழ் நம் வாழ்வியலுக்கு, அறிவியல் உணர்வுக்கு, உளவியலுக்கு, மெய்யறிவியலுக்குத் தேவையான அத்தனைக் கூறுகளையும், உண்டாக்கித் தரும் வல்லமை சான்றது என்பதை நாம் உணர மறுக்கிறோம். கம்ப இராமாயணமும், வில்லி பாரதமும், திருவிளையாடல் புராணமுமே தமிழ் இல்லை. அவை யெல்லாவற்றிற்கும் மாறான வேறான ஒரு பெரிய திசைமுகம் தமிழில் உண்டு. அந்நிலை திருக்குறளில் மட்டுமே வித்தாக, மலராக, ஆனால் மிக நுட்பமாக, மறைமுகமாகக் காட்டப் பெற்றிருக்கின்றது. அந்த மெய்க் கூறுகளைப் பலவாறு அழித்துக் கொண்டுள்ளோம். ஏன்! திருக்குறளின் மெய்க் கூறுகளையே திரிபுக் கூறுகளாகக் காட்டும் போலி நிலைகளுக்கு அடிமைப்பட்டு விட்டோம். அந்த நிலைகளிலிருந்து மீளும் வரை நாம் உண்மைத் தமிழையும், அதன் ஒளிசான்ற உட்கூறுகளையும் காண முடியாது. எனவே, நாம் இக்கால் படிக்கின்ற தமிழ், கேட்கின்ற தமிழ், பேசுகின்ற தமிழ், நமக்கு ஒரு தாழ்வு மனப்பான்மையைத்தான் – ஓர் இழிவு வாழ்க்கையைத்தான் கற்பிக்க முடியும். எனவேதான் வெறும் தமிழ்ப் படித்தவர்கள் அதன் உண்மையை உணர முடியாமல், ஒளியைப் பெற முடியாமல், வாழ்வியலிலும் சரி, அறிவியலிலும் சரி திக்கு முக்காடித் திசைந்து போய்த் திகைப்புற்றுக் கிடக்கின்றனர்.

மெய்த் தமிழ் படித்தவர்கள் பண்பாளர்களாக இருப்பார்கள்; அன்புள்ளவர்களாக இருப்பார்கள்; அறிவுணர்வு மிகுந்தவர்களாக இருப்பார்கள்; ஒருவகை மேம்பட்ட, மீமிசை மாந்த உணர்வில் உயர்ந்த ஒருவகை உணர்வு மிக்கவர்களாக, உண்மை மாந்தர்களாக இருப்பார்கள். உண்மைத் தமிழில் அன்பின்மை இல்லை; அகங்காரம் இல்லை; அறியாமை இல்லை; அறிவுச் செருக்கில்லை; வாழ்க்கைத் தவறுகள் இல்லை; வழுக்கல் இழிவுகள் இல்லை; கீழ்மை இல்லை; தனக்கே எல்லாந் தெரியும் என்ற கிறுக்குத்தனம் – காரறிவாண்மை

இல்லை. இதனை அந்தத் தூய தமிழை உணர்ந்தால்தான், பேசினால் தான், படித்தால்தான் அதோடு பழகினால்தான் உணர முடியும். வேறு எந்த மொழியாலும் இத்தகைய ஒட்டுமொத்தமான பயன் களைப் பெற முடியாது. இஃது உண்மை. அழிக்க முடியாத உண்மை. இவ்வுண்மைக்கு மாறாக இக்கால் தமிழ்ப் படித்தவர் களிடம் உள்ள குறைகள், அவர்கள் உண்மைத் தமிழைப் படித் தில்லாததால் வந்த குறைகள். உண்மைத் தமிழைப் பேசாமையால் வந்து பொருந்திய குறைக் கூறுகள். எனவே, அவர்களிடம் அன் பில்லை; அறிவில்லை; பண்பில்லை; உலகப் பயன் கருதும் பரந்த நோக்கமில்லை. எனவே, தங்களுக்கும், தங்கள் தாய்மொழிக்கும் ஓர் இழிவை, ஒரு பழியைத் தேடிக் கொண்டவர்களாக இருக்கிறார்கள்; வாழ்கிறார்கள்.

இந்த உண்மைகளை உடனடியாக யாரும் உணர்ந்து கொள்ளல் முடியாது. அவர்களிடம் உள்ள அறியாமையாகிய இருளும், மனக் கசண்டுகளாகிய மருளும் நீங்கப் பெறுதல் வேண்டும். அப்பொழுது தான் தமிழ்மொழியின் தூய தன்மையை, இயற்கைக் கூறுகளை, தனி முதல் உயர்ச்சிகளை உணர முடியும். மொழி என்பது வெறும் எழுத்துகளன்று; உணர்வு. உணர்வு தோன்றிதான் ஒலி தோன்று கின்றது; ஒலி தோன்றிதான் வடிவம் தோன்றுகின்றது. நம் அன்னையின் படத்தை ஓர் ஓவிய நோக்கில் பார்ப்பது வேறு; உணர்வு நோக்கில் பார்ப்பது வேறு. அதுபோல் தமிழை வெறும் எழுத்து வடிவங்களாகப் பார்க்கும் படப் பார்வை (Photographic sight) உள்ளவர்கள், அதன் உணர்வின்பத்தைப் பெற முடியாது. அதை ஒலி வடிவாக உணர்ந்து, உணர்வு வடிவாகத் தன்னுள் கரைத்துக் கொண்டவர்களே உண்மைத் தமிழை உணர்ந்தவர்கள் ஆவார்கள். வேறு மொழிகளில் இந்தத் திறன் இல்லையா என்று சிலர் கேட்கலாம். அதுதான் இயற்கைக்கும் செயற்கைக்கும், முதன்மைக்கும் வழிமைக்கும், உண்மைக்கும் போலிக்கும் வேறுபாடு உணர முடியாமல் எழுகின்ற கேள்வியாகும். **மிகவும் இயற்கை யான தோற்றக் காலத்திலே மாந்தத் தோற்றத்துட னேயே தோன்றி, அவனுடனேயே வளர்ந்து, அறி வார்ந்து உணர்வு மல்கிக் கிளர்ந்து, அவன் போலவே கூர்தலுற்று வாழ்வியலுக்கு வேண்டிய எல்லா நிலைகளிலும் விளங்கி நிற்பது, தமிழ்.** நன்றாக உயர்ந்து, வளர்ந்து, விரிந்து புடைபரப்பி விசும்பளாவி நின்று பூத்துக் காய்த்துக் கனிந்து நிற்கும் ஆலமரம் போன்றது இது. பிற மொழிகள் அவ்வாறின்றிப் பிந்தித் தோன்றி, நல்ல வளர்ச்சி யெய்தாமல், உணர்வுப் பிதுக்கமுற்றுத் திரிந்து வளர்ந்து, முரடும் முறுக்குமுற்று முடக்கிளைகள் பரப்பி வளர்ந்து வரும் காட்டு மரங்கள் போல்வன. எனவே, அவற்றின் நல்ல கூறுகளைவிட, மாந்தர்க்குப் பயன்படும் மேலாம் மாந்த உணர்ச்சிகளை விட, தமிழில்

உள்ள கூறுகள், இயற்கை உணர்ச்சிகள் செப்பமுற்றன; மேம்பட்டன; உயர்ந்தன; சிறந்தன என்பதில் சிறிதும் மிகையில்லை என்று உணர்தல் வேண்டும்.

எனவே தமிழுக்காக மட்டும் 'தமிழ்' என்னும் நிலையில் உள்ள போலித் தமிழைப் படிக்காமல், உணர்வுக்காக, உள்ளத்தின் ஒளிக்காக, வாழ்க்கை மேம்பாட்டுக்காக, பண்புக்காக, அன்புக்காக, அறிவுக்காக, ஒட்டுமொத்தமாக உயர்ந்த உயிர் விளக்கத்திற்காக நாம் தமிழைப் படிக்கவேண்டும்; கற்க வேண்டும். அப்பொழுது தான் தமிழ் கற்றவர்களைத் தமிழைத்—தாழ்வாகக் கருதும் புன்மை மனப்பான்மை விலகும் என்று உணர்ந்து கொள்ளல் வேண்டும். இனி, தமிழைப் படிக்க விரும்புகிறவர்கள், வெறும் தமிழ்மொழியை மட்டும் படிக்காமல், ஈண்டுள்ள அனைத்து அறிவியல் துறைகளையும் கற்று, அவற்றுடன் தமிழ்மொழி நிலைகளை இணைத்துப் பார்த்து, உண்மைத் தெளியவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இருள்நீங்கி இன்பம் பயக்கும்; மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

---


# ஒன்றிணைக!

**சிங்கை. மா. கதிரொளி**

"நான் தமிழன்" எனச்சொல்ல நாணுகின்ற தமிழா நீ
ஏன்தமிழ நாட்டில் இருக்கின்றாய்; யாதுபயன்?
கூன் விழுந்த வாழ்க்கை வாழ்கின்றாய்; நம்தமிழத்
தேன்மறந்து போனாயே "தோரா"த தென்னவனே!

அடங்கிக் கிடப்பதிலே அமைதி காண்பவனே!
முடங்கிக் கிடப்பது ஏன் முடமா ஆனாய் நீ?
ஒடுங்கி வாழ்வதிலே உரியநலம் காண்கின்றாய்!
நடுங்கிக் கிடப்பது ஏன்? நாடற்றுப் போனவனே!

மொழிப்பற்றை நீ துறந்து இனப்பற்றில் நீசிதறிக்
களிப்புற்றுத் திரிகின்றாய்;—கண்டபடி வாழ்கின்றாய்!
நிலைப்புற்று வாழ்ந்ததமிழ், நின்நாடு, நின்மரபு
குலைவுற்றுப் போவதுவோ—கூறிடுசெந் தமிழ்மகனே!



# நூறாசிரியம்

### பெருஞ்சித்திரன்

பாட்டு சஅ

கையணை யாக மெய்வெளிக் கிடத்திப்
பெய்பனி போர்த்திய பெற்றி யோர்க்கும்
புனைநார்ப் பின்னிய புல்லடுக் கூத்து
வினைநாட் கலைந்து வீழ்ந்துருள் வார்க்கும்
மெய்யுறுத் தில்லா மெத்தெனப் பஞ்சின்
தொய்யுட் சேக்கை துவட்டி யோர்க்கும்
மொய்துயி லொன்றும் போலச்
செய்வினை பலவாச் செறுவிளை வொத்தே!

**பொழிப்புரை :** கையையே தலைக்கு அணையாக வைத்து, உடலை வெட்ட வெளியிற் கிடத்தி, பெய்கின்ற பனியையே போர்வையாகப் போர்த்து உறங்கும் தன்மையோர்க்கும், புனையப் பெற்ற நாரினால் பின்னியதும், மூங்கிலைக் கொண்டு கோத்துக் கட்டப் பெற்றதுமான சட்டிலில், வினைமிகுந்த நாளுக்கென அலைந்து, ஓய்வின்றி வினையாற்றிக் களைத்து, அயர்வை நாடி, விழுந்து உருண்டு புரள்வார்க்கும், மேனி உறுத்தலில்லாத மெத்தென்னும் பஞ்சால் பொதியப் பெற்றதும், தொய்வுடையதுமான படுக்கையில் படுத்து, அது துவளும்படி அயர்வார்க்கும், மொய்த்து வருகின்ற தூக்கம் ஒரு தன்மையுடையதாக இருப்பது போலவே, இவ்வுலகத்துச் செய்யப் பெறுகின்ற வினைகள் பலவாக இருப்பினும், அமைகின்ற விளைவு மக்கள் துய்ப்பு என்னும் ஒரு தன்மை நோக்கிய தாகவே இருக்கின்றது.

**விரிப்பு :** இப்பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

உலகத்துள்ள பலரும் பலவாறான வினைகளில் ஈடுபட்டுத் தம் வாணாளைப் போக்குகின்றனர். வினைகளின் தொடக்கமும் நடப்பும் முடிவும் பல்வேறு வகைகளாகின்றன. ஆனாலும் அவற்றின் பயன் முழுவதும் மாந்தனின் துய்ப்பு என்னும் ஒரு விளைவுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றது. எந்த வினையும் அவன் துய்ப்புக்காகவே செய்யப் பெறுகிறது. எனவே, உலக வினைகளின் முடிவு மாந்த உயிரின் துய்ப்பு என்று முடிவாகின்றது. இந்த உயரிய அரிய மெய்ப்பொருள் உண்மை இங்கு ஓர் உவமையால் விளக்கப் பெறுகிறது.

மாந்தர்கள் வினைகளின் பொருட்டாகப் பலவாறான முயற்சிகளில் ஈடுபட்டுப் பலவகையாக இயங்குகின்றனர். பலவேறு இடங்களுக்குப் பல்வேறு திசைகளில் அலைகின்றனர்; பலவகையான உணவுப் பொருள்களை உண்கின்றனர்; பலவேறு சுவைகளை விரும்புகின்றனர். அவ்வாறே நாளிறுதியில் அவர்கள் பலவாறான இடங்களில் படுத்து உறங்குகின்றனர். ஒருவன் கையையே தலையணையாகக் கொண்டு வெட்டவெளியில் பனியில் படுத்துறங்குகின்றான்; இன்னொருவன் நாரால் பின்னிய கட்டிலில் படுத்து உறங்குகின்றான்; மற்றொருவன் மெல்லிய பஞ்சு பொதிந்த மெத்தையில் படுத்து அது துவளுமாறு புரண்டுருண்டு உறங்குகின்றான். ஆனால், அவ்வனைவர்க்கும் உறக்கம் என்னும் அவ் வோய்வின்ப உணர்ச்சிநிலை ஒன்றுதான்.

**கையணையாக:** கையே அணையாக கையைத் தலைக்கு அணையாக வைத்து.

**மெய் வெளிக் கிடத்தி:** மெய்யை (உடலை) வெட்ட வெளியிற் கிடத்தி; அஃதாவது படுக்கக் கிடத்தி.

**பெய் பனி போர்த்திய பெற்றியோர்:** பெய்கின்ற பனியையே போர்வையாகப் போர்த்துக் கொண்ட தன்மையோர்; அஃதாவது வெற்று மேனியுடன் வெட்ட வெளியில் படுத்துத் தூங்கும் தன்மையுடையவர்

**புனை நாரப் பின்னிய புல்லடுக்கம்:** புனையப் பெற்ற நாரால் பின்னிய கட்டில் மூங்கில் கட்டில்.

**புல்லடுக்கம்:** மூங்கிலால்—இணைத்துக் கட்டியது.

**வினை நாள்:** வினைக்குரிய நாள்.

**வீழ்ந்துருள்வோர்:** படுத்துப் புரள்வோர்.

**மெய்யுறுத்தில்லா:** மேனி உறுத்தாத.

**மெத்தென:** மெத்தென்று உள்ள

**பஞ்சின் தொய்யுள் சேக்கை:** பஞ்சாலான தொய்வு உடைய படுக்கை.

**துவட்டியோர்:** படுக்கை துவளுமாறு படுத்துருண்டு தூங்குவார்.

**மொய்துயில்:** மொய்க்கின்ற தூக்கம் வந்து சூழ்கின்ற உறக்கம்.

**செய்வினை பலவா:** ஒவ்வொருவரும் செய்கின்ற வினைகள் பலவாக இருக்க.

**செறு விளைவு:** செறுத்த விளைவு—அமைந்த பயன்.

**ஒத்து:** ஒத்தது. வினைகள் பல; விளைவு ஒன்று.

# செய்திகள்

## 1. பனப்பாக்கம், ஆசிரியர் நாள் விழா :

கடந்த தி. பி. 2010 மடங்கல் 20-ஆம் பக்கல் **(5-9-79)** அறிவன் காலை 10 மணியளவில், வ. ஆ. மாவட்டம் பனப்பாக்கம் தொடக்கப் பள்ளிக் கட்டடத்தில், ஆசிரியர் கழக நடுவத்தின் சார்பாக, ஆசிரியர் நாள் கொண்டாடப் பெற்றது. விழாவிற்கு, நெமிலி சரகம் பள்ளித் துணை ஆய்வர் திரு. **க. வடிவேலு** க. இ; ஆ. ப. தலைமை தாங்கினார், திரு. **ந. வே. இளங்கோவன்** க. இ. (இளம் பள்ளித் துணை ஆய்வர், நெமிலி சரகம்) வரவேற்புரையாற்றினார். ஆசிரியர் கழக நடுவச் செயலர் திரு. **ஆ. பேரானந்தம்** கூட்ட அறிக்கை படித்தார். திரு. **தி. இரா. வேங்கடாசலம்,** வணி. இ, திரு. **வே. கண்ணன்**, திரு. **வே. மா. திருஞானம்** ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியாக பாவலரேறு. **பெருஞ்சித்திரனார்** அவர்கள் 'புதிய குமுகாயமும் திருக்குறளும்' என்னுந் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். திரு. **பெ. பூ. அண்ணாமலை** நன்றி கூற, நாட்டுப் பண்ணுடன் விழா இனிது நிறைவுற்றது.

## 2. நெமிலி தென்மொழி பயிலுநர் அவை—பொதுக் கூட்டம் :

சென்ற மடங்கல் 20, (5-9-79) அறிவன் மாலை 8 மணியளவில், நெமிலி, உயர்நிலைப் பள்ளித் திடலில், தென்மொழி பயிலுநர் அவை சார்பாகப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது.

---

(முன். பக்கத் தொடர்ச்சி)

இவ்வுலகத்து மனஞ் சார்ந்ததும், அறிவு சார்ந்ததும், உடல் சார்ந்ததும், காலஞ் சார்ந்ததும், திசை சார்ந்ததும், இடஞ் சார்ந் பூதங்கள் தனித்தும் இணைந்தும் சார்புற்றதும் ஆகிய எண்ணிறந்த வினை முயற்சிகள் பலவாக இருப்பினும், அவை யாவற்றின் முடிவும் பயனும் உயிர் துய்ப்புறுவதும், அதன் வழி அது மீமிசை உயர்ந்து மலர்ந்து ஒளி பெறுதலுமே என்க. அஃது, எதுபோலாம் எனின், அனைவரின் படுக்கை நிலைகள் வேறு வேறு யினும், அவர் தாம் துயிலும் உறக்க நிலை அவ்வுயிர்களுக்கு ஓய்வும் ஆறுதலும் ஒடுக்க வின்பமும் தரும் துய்ப்புணர்வு ஒன்றுதல் போல் என்க.

இது **பொதுவியல்** என் திணையும், **பொருண்மொழிக் காஞ்சி** என் துறையுமாம்.

கூட்டம் தென்மொழி முழக்கத்துடனும், 'கெஞ்சுவதில்லை' கொள்கைப் பாடலுடனும் தொடங்கியது. திரு. சு. அருளின்பன் அவர்கள் வரவேற்புரை யாற்றினர்: தமிழாசிரியர் திரு. மு. கதிரவன் தலைமை தாங்கினர். திருவாளர்கள் க, கிருட்டிணன், மா. செ. தமிழ்மணி, புலவர். திரு குமர தன்னொளியன் ஆகியோர் கொள்கை விளக்கம் செய்து எழுச்சியுரையாற்றினர். அடுத்து, பாவலரேறு. பெருஞ்சித்திரனர் 'தமிழின மறுமலர்ச்சி' என்னுந் தலைப்பில் அரியதோர் உணர்வுரை யாற்றினர். கூட்டத்திற்கு அண்டையயல் சிற்றூர்களிலிருந்தெல்லாம் அன்பர்களும், மாணவர்களும், பெரியோர்களும், மகளிரும் வந்திருந்து இரவு 12 30 மணிவரை அமைதியாக இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. அரசியல் கலப்பில்லாமல் இன எழுச்சி, மொழியுணர்வு இவற்றின் மேம்பாட்டிற்காக அமைந்த இந்நிகழ்ச்சியால், அவ்வட்டார மக்கள் ஒருவகைப் புத்துணர்வெய்தினர் என்றல் அது மிகையாகாது.

### 3. திரு. வி க. நினைவுநாள் விழா ஈரோடு:

கடந்த 17-9-79-ஆம் நாள், ஈரோடு, முருகன் தமிழ்ச் சங்கம் சார்பாக, திரு. வி. க. நினைவுநாள் விழா சூரம்பட்டி, இலக்குமி மழலையர் பள்ளித் திடலில் மருத்துவர். திரு. எம் என். வீரய்யன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கழக இயக்குநர் திரு. முருகு. சி. நா ப. அருணசலம் வரவேற்புரை யாற்றினர். பின்னர் பாவலர். திரு. குமர நடவரச ஈவப்பனர் அவர்கள் திரு. வி. க. தொண்டு குறித்து உரையாற்றினர். அடுத்து பாவலரேறு. பெருஞ்சித்திரனர் அவர்கள் 'திரு. வி. க.வின் தமிழ்த் தொண்டு என்னுந் தலைப்பில் சிறப்புரை யாற்றினர். தலைவர் முடிவுரைக்குப் பின் திரு. முருகு. அ. அருணசலம் நன்றியுரையாற்ற விழா இனிது நிறைவுற்றது.

### 4. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தொடக்க விழா செஞ்சி தெ. ஆ.:

கடந்த 14-10-79:ஆம் பக்கல் ஞாயிறு மாலை 7 மணி அளவில் தெ. ஆ மாவட்டம், செஞ்சி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் திடலில், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தென்னார்க்காடு மாவட்டக் கிளைத் தொடக்க விழா, காப்பாளர் திரு. வெ சின்ன சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர். ந. நடராசன் வரவேற்புரை யாற்றினர். திரு. து. இராசேந்திரன் அறிமுக வுரை யாற்றினர். கழகத்தை வாழ்த்தி திருச்சி, வழக்கறிஞர் திரு. அ. மு சம்பந்தம், திரு. கு. தமிழ்மன்னன், பாவலர் குமர நடவரச ஈவப்பனர் ஆகியோர் உரையாற்றினர். இறுதியில்

பாவலரேறு **பெருஞ்சித்திரனுர்** சிறப்புரையாற்றினர். திரு. **மரிய ராசா** நன்றியுரைக்குப்பின் இரவு 10 மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.

## பிற செய்திகளும் நன்கொடைகளும்

### 5 யாழ்ப்பாணம் கல்வி, கலை, பண்பாட்டுக் காப்புக் கழகக் கால்கோள் விழா :

கடந்த 24-8-79 வெள்ளிக்கிழமை மாலை, யாழ்ப்பாணம், கொட்டடி, வில்லூன்றி விநாயகர் கோயிலுக்கு முன்பாக உள்ளதும், பேராசிரியர். இரா **குமாரவடிவேலுவிஞல்** கழகத்துக்கு நன் கொடையாக வழங்கப் பெற்றதுமான காணியில், யாழ்ப்பாணம் கல்வி, கலை, பண்பாட்டுக் காப்புக் கழகத்தின் கால்கோள் விழா, கழகத் தலைவர் சட்டவியல் அறிஞர் திரு. **த சோமசுந்தரம்** அவர்கள் தலைமையில் மிகவும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் திரு. **ச வித்தியானந்தன்** அவர்கள், விழாவில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ருர். பள்ளித் தலைமையாசிரியர் கழகச் செயலவை உறுப் பினர் திரு. **அ செல்லத்துரை** வரவேற்புரை வழங்கினுர். கழகப் பொதுச் செயலாளரும் ஓவியருமான திரு. **ச. பெனடிக்டு** கழகத் தின் குறிக்கோள் பற்றி உரையாற்றினுர். கழகக் காப்பாளரான **வண. தனிநாயகம் அடிகளார், பிரம்மதிரு. சுப்பிர மணியம், வண. தந்தை செயநலன்** ஆகியோர் வாழ்த் துரைகள் வழங்கினர். யாழ்ப்பாணம் நகரத் தந்தை திரு. **இராச. விசுவநாதன்** விழா மலரை வெளியிட்டார். கழகத்திற்கு நிலம் அன்பளிப்பாக வழங்கிய பேரா. திரு. **குமாரவடிவேல்** மலரின் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். கழகச் செயலாளர் திரு. **சு பரநிருபசிங்கம்** நன்றியுரை கூறினுர். தொடக்கத்தில் மலரில் வெளியாகியிருந்த, பாவலரேறு **பெருஞ்சித்திரனுர்** அவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்தை, இசைப்புலவர் திரு. **இரா. நடராசன்** பல பண்களில் பாடினுர். இசைப் புலவர் திரு. எசு. பாலசிங்கம் இறை வாழ்த்துப் பாடினுர். விழாவிற்குத் தமிழகத்திலிருந்து செட்டி நாட்டரசர் வயவர். திரு. **முத்தையா** அவர்களும், அவரின் மகனுர் திரு. **எம். ஏ. எம். இராமசாமி** அவர்களும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. **பி. சோமசுந்தரம்** அவர் களும் வாழ்த்துச் செய்திகள் விடுத்திருந்தனர்.

### 6 இரவீந்திரன் — மாலதி வாழ்க :

சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர் திரு. பி. பெ. அரங்கசாமி, க. மு , இ. கா. ஊ. அவர்களின் ஓரகர் கோவை திரு

த. இரா. இராமு – திருவாட்டி கமலம் ஆகியோரின் மகனுர் செல்வன் **த. இரா இரவீந்திரன்,** (க. இ.), ஆணையரின் அளியர், சுள்ளிப் பாளையம் ஊராட்சித் தலைவர் திரு. க. மு. **துரைராசு**—திருவாட்டி **சுசீலா** ஆகியோரின் மகளார் செல்வி **மாலதி** (அறி. மு.) ஆகிய மணமக்களின் திருமண விழா கடந்த **26-8-1979** ஞாயிறன்று ஈரோட்டில் சிறப்புற நடைபெற்றது.

விழா முடிவில் சான்றோர் பலர் வாழ்த்துரை வழங்கினர். வாழ்த்துரைய 'பள்ளிப் பறவைகள்' 'அன்னை மொழியே' வணக்கப் பாடலுடன் பாவலர் குமர. நடவரச ஈவப்பனர் அவர்கள் ஏற்றமுறத் தொடங்கி வைக்க, தொடர்ந்து திரு. குமாரசாமி (கோவை மாவட்டக் காவலர் கண்காணிப்பாளர்) திரு. தீனதயாளு (திருச்சி அறநிலைய ஆணையர்) பண்டுவர் சென்னகேசவலு (பெருந்துறை) ஆகிய பெருமக்கள் அன்புரையும் அறிவுரையும் வழங்கினர். தொடக்கத்தில் மணமகளின் தந்தையார் அனைவரையும் வரவேற்று உரையாற்றினர். இறுதியாக, அவர் தம் இளவல் தென்மொழி மறை, நித்தலின்பனுர் நன்றி நவின்றார். மணமக்கள் சார்பாக விழா நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 10/- வழங்கப்பெற்றதுடன் தென்மொழிக்கும், தமிழ்ச்சிட்டுக்கும் ஆண்டு உறுப்பினர் கட்டணமும் கட்டப் பெற்றது. மணமக்கள் தமிழ்நலம் மறவாது நீடு வாழ்க எனத் தென்மொழியும் வாழ்த்தி மகிழ்கின்றது.

## 7. திருக்குறள் மன்றப் சிறப்பு நிகழ்ச்சி; பல்லடம் :

சென்ற மடங்கல் உ அ—(13-9-79) மாலை 6-30 மணியளவில் கோவை, பல்லடம் மணிக்கூண்டுக்கருகிலுள்ள மடத்தில், திரு. ப. **அர. கோதண்டராமன்,** வணி. இ அவர்கள் தலைமையில், திருக்குறள் மன்றச் சிறப்பு நிகழ்ச்சி நடந்தது. பண்ணுராய்ச்சிப் பேரறிஞர் உயர்திரு. **குடந்தை. ப. சுந்தரேசனுர்,** இசைக்கலை நுண்மை என்னும் பொருளில் சொற்பொழிவாற்றினர்.

## 8. நாவலர் நூற்றுண்டு விழா - புதுச்சேரி :

கழிந்த கன்னி 14 (30-9-79) மாலை 6 மணியளவில் புதுச்சேரி, திருமுடி சேதுராமனுர் இல்லத்தில், தனித்தமிழ்க் கழகம், நாவலர் சோமசுந்தர பாரதியார் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடியது. பேரா திரு. **அ. பசுபதி** தலைமையில் திருவாளர்கள் **க. தமிழமல்லன், திருமுடி சேதுராமன்** பூதூர் புலவர். கி. **வேங்கடசாமி,** புலவர் **பன்னீர்ச்செல்வம்,** பேரா. **இராச. குழந்தைவேலனுர்,** திரு. **சி. தமிழ்மாறன்** ஆகியோர் உரை நிகழ்த்தினர். திரு. தமிழநேயன் நன்றி கூறினர். நாவலர் அவர்கட்குச் சிலை வைக்குமாறு தமிழ்நாடு, புதுச்சேரி அரசுகளைக் கேட்டுக்கொள்வதெனக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.

## நன்கொடைகள்

1) திருப்பூர், 4, அரசு முகவாண்மை மேலாளர் திரு. சு. **சட்டநாதன்** அவர்கள் துணைவியார் செயலக்குமிக்குக் கடந்த 22-6-79-இல் ஆண் மகவு பிறந்ததன் நினைவாக, தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 5 நன்கொடை வரப் பெற்றோம். குழந்தை பல்லாண்டு வாழ, தென்மொழி வாழ்த்துகிறது.

2) கரூர் (வட்) அரவக்குறிச்சி, ஆசிரியர் திரு. **முத்து கந்தவேள்** துணைவியார் மருதாம்பாளுக்குக் கடந்த 20-9-79 அன்று ஆண் மகவு பிறந்து அதற்குக் **காவேரி முத்து** என்று பெயரிட்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா 10 நன்கொடை வரப்பெற்றோம். காவேரிமுத்து பல்லாண்டு வாழ்க எனத் தென்மொழி வாழ்த்துகிறது.

---

# தென்மொழிக் கருத்துகளைப் பரப்புங்கள்!

தமிழ் நாட்டில் போலித்தனமான கருத்துகள் நிறையப் பரவுகின்றன. ஒருபுறம் இளைஞர்களை உண்மை உணர முடியாமல் செய்யும்—மன வெறி, உடல் வெறி இவற்றை வளர்க்கும் புல்லிய உணர்வு நிலைகளும் அவை தொடர்பான புல்லறிவு நிலைகளுமே பரப்பப்பெறுகின்றன. இவற்றின் வழி, மறுபுறம் பணத் தேவைகளை அதிகமாக்கி, கொலை, களவு, கொள்ளை முதலிய கொடு நிலைகள் பரவி வருகின்றன. ஆங்கிலம், இந்தி முதலிய பிற மொழிகள் மதிக்கப் பெறும் அளவுக்குத் தமிழ் மதிக்கப் பெறுவதில்லை. மதிக்கப் பெறும் தமிழும் நல்ல உண்மையான தமிழில்லை. அத்தகைய தமிழ் மொழியில் வரும் தாளிகைகளும், செய்தியிதழ்களும் தமிழ் மக்களைப் பல வகையிலும் திசை திருப்புகின்றன. இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாகப் போக்குவதற்கு நாம் சில அடிப்படை வினைகளைச் செய்தல் வேண்டும். உண்மைத் தமிழன்பர்கள் இனிமேலும் தென்மொழி, தமிழ்ச்சிட்டுக் கருத்துகளை ஆங்காங்கு முடிந்த அளவில் பரப்புங்கள்! சிறு அறிக்கைகளாக, நூல்களாக, சுவரொட்டிகளாக தென்மொழிப் பாடல்களையும் கருத்துகளையும் அடித்துப் பரப்புங்கள். நல்லவை பரவப் பரவத்தான் அல்லவை தேயும்; அறம் பெருகும்!

# தமிழை மறப்பேனா?

தமிழீழ விடுதலைப் பாவலர்
காசி. ஆனந்தன்

பட்டினி கிடந்து பசியால் மெலிந்து
பாழ்பட நேர்ந்தாலும் — என்றன்
கட்டுடல் வளைந்து கைகால் தளர்ந்து
கவலை மிகுந்தாலும் — வாழ்வு
கெட்டு நடுத்தெரு வோடு கிடந்து
கீழ்நிலை யுற்றாலும் — மன்னர்
தொட்டு வளர்த்த தமிழ் மகளின் துயர்
துடைக்க மறப்பேனா?

நோயில் இருந்து மயங்கி வளைந்து
நுடங்கி விழுந்தாலும் — ஓலைப்
பாயில் நெளிந்து மரண மடைந்து
பாடையில் ஊர்ந்தாலும் — காட்டுத்
தீயில் அவிந்து புனலில் அழிந்து
சிதைந்து முடிந்தாலும் என்றன்
தாயில் இனிய தமிழ்மொழி யின் துயர்
தாங்க மறப்பேனா?

பட்டமளித்துப் பதவி கொடுத்தொரு
பக்கம் இழுத்தாலும் — ஆள்வோர்
கட்டி அணைத்தொருமுத்த மளித்துக்
கால் கை பிடித்தாலும் — என்னைத்
தொட்டு விழுந்து வணங்கி இருந்தவர்
தோழமை கொண்டாலும் — அந்த
வெட்டி 'மனிதர்' உடல்களை மண்மிசை
வீழ்த்த மறப்பேனா?

பொங்கு வெறியர் சிறைமதி லுள்ளெனைப்
பூட்டி வதைத்தாலும் — என்றன்
'அங்கம்' பிளந்து விழுந்து துடிக்க
அடிகள் கொடுத்தாலும் — உயிர்
தொங்கி அசைந்து மடிந்து தசையுடல்
தூள்பட நேர்ந்தாலும் — ஒரு
செங்களம் ஆடி வரும் புகழோடு
சிரிக்க மறப்பேனோ?

தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகள்

# தமிழ்மறையின் பாங்கு

பேராசிரியர் இரா. மதிவாணன் க. மு.

இந்நாவலந்தேயத்துக்கு ஆரியர் வருமுன்பே தமிழர்க்கென நான்மறைகள் இருந்தன. இது தமிழ்ச் சித்தர்களின் கூற்றாலும் உறுதிப்படுகின்றது. இவை, ஆரிய நான்மறைகளைப் போல ஓர் இனத்தாரின் மேன்மையை வலுப்படுத்தவும் மற்றோர் இனத்தாரைத் தாழ்த்தவும் தோன்றியனவல்ல. தமிழ்மறைகள் துறவு நெறிநின்ற முனிவர் பயில்வனவாதலின் அந்தணர் நூல் என்றும் அருமறை என்றும் வழங்கப்பட்டன. தமிழ் நான்மறை எழுத்தால் எழுதப் பட்டவை. ஆரிய நான்மறை எழுதப்படாமல் வாய்மொழியாக மட்டும் ஓதப்பட்டவை. தமிழ்மறை, அறக்கள வேள்வியை மட்டும் ஏற்பவை. ஆரியமறை, மறக்கள வேள்வியை (கொலை வேள்வி) வற்புறுத்துபவை. தமிழ்மறை, சித்தர் நிலை, அல்லது அந்தணர் (முனிவர்) நிலை எய்திய அனைவர்க்கும் பொது. ஆரியமறை ஒரு வகுப்பார்க்கே உரியது.

நான்மறை பகுப்பு சமணரிடையிலும் இருந்தது. இருபத்து நான்காவது தீர்த்தங்கரரான மகாவீரர் தி. மு. ஆறும் நூற்றாண்டி னர் என்பதால், முதல் தீர்த்தங்கரர் தி. மு. 1660 ஆண்டுகட்கு முற்பட்டவராதல் வேண்டும். தமிழ்மறையான திருக்குறளில் இறைவன் பெயராகச் சுட்டப்படும் 'பகவன்' என்னுஞ்சொல் சமண சமயத்தார்க்கும் இருக்கு வேதகால ஆரியர்க்கும் வழிபடு தெய்வப் பெயராக இருந்திருக்கிறது. அதர்வ வேத காலத்திலும் பகவனை ஆரியர் வணங்கினர்.

ஆரியர்க்கே யுரிய தெய்வங்களைப் பழங்காலத் திரவிடரோ இற்றைத் திரவிடப் பிரிவினரோ வணங்கியதில்லை. ஆயின், வட திரவிட மொழியினருள் ஒரு பிரிவினரான ஒரோவான் மக்கள், தம்முள் மெய்ப்பொருள் அறிவும், நோய் நொடிகளைத் தீர்க்கும் மந்திர வாற்றலும், இறைத் தன்மையும், பெற்ற சித்தனை 'பகவன்' (Bhagat) என்றழைக்கின்றனர். தம் முன்னோர்க்குத் தென்புலத்தார் கடனிறுக்க யாரேனும் 'பகவனை' அழைத்தால், அப்பொழுது பூணூல் அணிந்த கோலத்துடன் பகவன் சடங்கு செய்ய வருவான். ஒரோவான் மக்கள் இவனை வணங்கிப் போற்றுகின்றனர்.

சித்தர் நிலை யெய்திய, 'பகவன்' என்னும் முனிவர் அறப்பழங் காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும் என்றும், அவர் திரவிட மக்களால் வழிபடப்பட்டு வந்ததால், பகவன் என்னும் சொல் 'கடவுள்' என்னும் பொருளில் ஆளப்பட்டு, திரவிடரிடமிருந்து ஆரியர்க்கும் சமணர்க்கும் தெய்வப் பெயராகியிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. வேள்விகளைப்பற்றி மட்டிலும் பேசும்

ஆரிய வேதங்கள் போலன்றித் தமிழ் நான்மறை மெய்ப் பொருள் நாட்டமுடையது. இஃதொன்றே தமிழ் நான்மறையின் தொன்மை முன்மை தாய்மை தலைமைகளை நாட்டவல்லதாகும்.

குளிர் நாட்டிலிருந்து வந்த ஆரியர் எரியோம்பும் இயல்பினர். குமரி நாட்டிலிருந்து பரவிய தமிழர் சிவனை அழல் வண்ணனாக வழிபடும் இயல்பினர். வடபுலத் தமிழர் அழல் வண்ணனைப் போற்றிப் பாடிய பாடல்களைப் போலித்து ஆரியரும் அவற்றைத் தம் வேள்விப் பாடல்களாக மாற்றிக் கொண்டனர். இருக்கு வேதப் பாடல்கள் ஆரியர்க்கே உரிய மூலப் பாடல்களாயின், அம்மரபு ஏனைய ஆரிய இனத்தவரான கிரேக்க செருமானியரிடையிலும் நூல் வேதங்களாகவும் எரியோம்பும் வேள்விகளாகவும் பரவியிருக்க வேண்டும். இந்திய ஆரியரிடையில் மட்டும் வேதம் வேள்வியும் தோன்றக் கரணியம் யாது?

இசைக் கலையை முத்தமிழில் ஒன்றாக வளர்த்தவர் குமரி நாட்டுத் தமிழர். இராவணனும் இசையில் வல்லவன். சாம வேதம் ஓர் இசைக் களஞ்சியம் எனப்படுகிறது. அதற்குரிய பண்களும் யாப்பும் எங்கிருந்து கிடைத்தன. வேறெந்த ஆரிய இனத்தாரிடம் அப்பண்ணமைப்புகளின் மூலக் கூறுகள் இருந்ததற்கான சான்று உள்ளது? ஆயிரக்கணக்கான பண்ணமைப்புகளை உருவாக்கி வளர்த்த தமிழரிடமிருந்தே ஆரியரின் சாமவேதம் முழுமையாகக் கடன் பெற்றுள்ளது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

ஆரியர்களை வேத முதல்வர் என்றும் மூலவர் என்றும் கூறுவ தாயின், இருக்கு வேதப் பாடல்கள் கருநிறத்தவரால் பாடப்பட் டிருப்பதேன்? **இருக்கு வேத காலத்தில், ஆரிய இனத்தைச் சார்ந்த வெண்ணிற மகளிர், கருத்த முடியும் கருவிழி மிளிரும் கண்களும் கொண்ட கருநிறக் குழந்தைகளைப் பெற்று வளர்க்கப் பெரிதும் விரும்பினர்** என்று **'Sudras in Ancient India'** என்னும் நூலில் பர் சர்மா கூறுகிறார். இதிலிருந்து, தமக்குக் கருநிறக் குழந்தை பிறப்பதை ஆரியர் விரும் பினர் எனில், **கருநிறத்தவர் ஆரியர்களாக உயர்வாக மதிக் கப்பட்டனர் என்பது வெளிப்படை.**

இருக்கு வேத காலத்துக்கு முந்திய வடபுலத் தமிழர்களே ஆரியர் பொறாமைப்படும் அளவுக்கு வாழ்க்கைநிலை, நாகரிகம், தெய்வ வழிபாடு ஆகியவற்றில் உயர்ந்திருந்தார் எனின், குமரி நாட்டுத் தமிழர் அவரினும் பன்மடங்கு உயர்ந்து ஒளிர்ந்திருப்பர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

பகை முடிக்கக் கருதும் தமிழரின் புறப் பாடல்களையும், நேர்த்திக்கடனிறுக்கும் தெய்வப் பாடல்கள் விரவிய தேவபாடாண்

திணைப் பாடல்களையும் ஒருசேரக் கலந்து, இருக்கு வேத பாடல்களை ஆரியர் பாடியுள்ளனர். புறப்பாடற் கருத்துக்களைத் தேவ பாடாணில் கலந்து பாடுவது தமிழ் நான்மறையின் பாங்கு அன்று. பகையினத் தாரை அழிக்கப் போர் முறைகளைச் செவ்வனே பெருக்குவதன்றி, இறைவனைத் துணைக்கு அழைக்கும் மரபு புறத்துறையில் இல்லை.

பகையினத்தாரை அழிப்பதற்குத் தெய்வங்களின் துணை வேண்டுவது ஒன்றே ஆரிய நூல் வேதங்களின் முடிந்த நோக்க மாகவும் முடிவற்ற போக்காகவும் காலந்தொறும் நிலவிவந்துள்ளது.

தமிழ நான்மறை மெய்ப்பொருள் நாட்டமுடையதாகக் காலந் தொறும் மேம்பட்டு வந்தது. ஆரிய நான்மறை தன்னலத்தால் பொன்னும் பொருளும் குவிக்கும் வேள்விப் பெருக்கு நாட்டமுடைய தாயிற்று. ஆரியரிடம் செல்வப் பெருக்கும் அதிகார வலிமையும் ஒருங்கு சேர்ந்தபின், தமிழ நான்மறைகள் அடிச்சுவடும் தெரியாமல் மென்மெல அழிக்கப்பட்டன.

தமிழ நான்மறை ஆரிய நான்மறையினும் விழுமிய நோக்கும் பண்பாட்டுப் பாங்கும் உடையது என்பதற்குப் பல சான்றுகளை காட்டலாம். ஆரிய நான்மறை பயின்றவனுக்குப் பிற இனத்தரை மதித்துப் போற்ற மனம் வராது; இழித்தும் பழித்தும் கூறத்தான் தெரியும். அதுவே நால் வருண பிரிப்புக்கும் சாதி வேறுபாடு களுக்கும் வழி வகுத்தது. தமிழ நான்மறை பயின்றோரின் பிறங் கடைகள் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் பொதுமைப் பண்மை இன்றுவரை வளர்த்து வந்துள்ளதை வரலாறு தெளி வாகக் காட்டுகிறது.

நாடாளும் மன்னன், குடிமக்கள் அனைவரும் தன்னைப் பின் புற்றத்தக்க உயர்ந்த ஒழுக்கமுடையவனாகவும் பண்பாட்டாளனாகவும் இருக்கவேண்டும் என்பது தமிழர் நெறி. அதன்படி, பொதுமகளைத் தீண்டுவதும் கூடுவதும் மன்னனுக்கு மாபெரும் பழி தரும் இழிதகவு விளைக்கும் என்று பாண்டியனொருவன் நாணினான். பகைவரை வெல்லேனாயின், பொதுமகளோடு கூடிய பழி என்னைச் சார்வதாக என வஞ்சினம் உரைத்தான்.

> தீதில் நெஞ்சில் காதல் கொள்ளாப்
> பல்லிருங் கூந்தல் மகளிர்
> ஒல்லா முயக்கிடை குழைக என் தாரே!

என்னும் புறப்பாடல் தமிழ் மன்னனின் பண்பாட்டுச் சிறப்பை உலக முழுதும் விண்ணும் மண்ணும் வியந்து போற்ற பறைசாற்றுகிறது. உலக வரலாற்றில் எந்த நாட்டு மன்னனாவது இத்துணைத் தூய ஒழுக்க நெறியைக் கடைப்பிடித்தானா என்று காண்பது அரிதினும்

அரிது. ஆண்களுக்கும் கற்பு நெறி காக்கப்பட்ட புதுமை தமிழ்ப் பண்பாட்டின் தனிச் சிறப்பாகும்.

உலக இன்பங்களை அட்டியின்றித் துய்க்க அதிகாரம் பெற்ற மன்னன் தன்பழிநாணும் தகவுடைய அறநெஞ்சினனாக இருத்தலை தமிழ நான்மறை வழிவந்த பாண்டியனிடம் காண முடிகிறது. ஆரிய நான்மறை மரபில் வந்த ஆரிய முனிவர், அரசர்களிடம் பொன்னும் பொருளும் பரிசாகப் பெற்றதோடு நூற்றுக்கணக்கில் இளமகளிரையும் பரிசு கேட்டுப் பெற்று காமக்கிழத்தியராக்கிக் கொண்டுள்ளனர். ஆரிய வேதங் கற்றவர்களின் பண்பாட்டைத் தமிழ் வேந்தரின் பண்பாட்டொடு ஒப்பிட்டுக் காண்க.

அதருவ வேதம் ஐந்தாம் மடலத்தின் 17-18 பாடல்கள் பகர்வது கேண்மின்: **‘ஒரு பெண் திருமணம் ஆனவளாக இருப்பினும், கன்னியாக இருப்பினும் எந்தப் பிராமணன் அவள் கையைப் பிடித்தாலும், அவள் அவனுக்கு மனைவி யாகி விடுவாள். அவளுக்கு ஏற்கெனவே எத்தனைக் கணவன்மார் இருந்தனர் அல்லது பிள்ளைகள் இருந்தனர் என்பதைப் பற்றிக் கவலையில்லை.”**

இராவணன் சீதையைக் கவர்ந்தது தவறு என்பதற்காக, அவனை அரக்கன் என்று காலமெல்லாம் பழி தூற்றிக் கொண்டிருக்கும் பெருமக்கள், இந்த அதருவ வேதப் பாடலைக் கேட்டு என்ன சொல்வார்களோ அறியேன். உருக்கரந்துலவும் உண்மையான அரக்கர் யார் என்பதை வேதங்கள் காட்டிக் கொடுத்துவிடும் என்பதற்காகவே ஆரிய வேதங்களைப் பிறர் பயிலலாகாது எனத் தடை கோலினர் போலும்!

மேற்கூறிய சான்றுகளால், தமிழ்மறை வளர்த்த பண்பாடு விழுமிது என்பதும், அதுவே இந்தியப் பெருநிலம் எங்ஙனும், பார் முழுதும், பரப்பப்படின் தமிழின் சீர்மையும் தமிழரின் நேர்மையும் உலக மக்களின் கண்களுக்குத் தெற்றெனப் புலப்படும் எனவும் அறிக.

---


## “தென்மொழி” சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 30 உருபா | 30 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 15 ,, | 15 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# கண்தெளி

கு. இராசேந்திரன், க. மு.

கொழுந்துவிட் டெரிந்த கொடுமை உணர்வுகள்
விழுந்து சிதர்ந்தன வீரனே கண்தெளி!
உழுந்துபோல் கறுத்த ஊமைக் கனவுகள்
எழுந்தே ஓடின இளமையே கண்தெளி! 1

அடுக்கிய ஆர்ப்புகள் அடங்கி ஒடுங்கின;
மிடுக்குடன் மனமே மெய்யறி கண்தெளி!
துடுக்குசெய் தூய்மையில் துயர்தரு நினைவுகள்
முடுக்கு மூலையில் முடங்கின கண்தெளி! 2

அமைதியாய் இருந்தே ஆர்த்தெழுந் தளாவும்
எமைதின் பேய்மைகள் எரிந்தன கண்தெளி!
குமைதல் கொண்டிடும் கொழுப்புக் கொடுமைகள்
சமைதல் சாய்ந்தன சழக்கிலே கண்தெளி! 3

அறிவுக் கனல்தான் அடர்ந்தது நெஞ்சில்
பொறிபுக் கொடுங்கியே பொசுங்கின கண்தெளி!
நெறிபுக் கார்ந்து நெஞ்சு நிமிர்ந்தெழ
வெறிகொள் வீம்புகள் வீந்தன கண்தெளி! 4

நோய்நொடி தருமிழி நொய்மைத் தினவுகள்
தீயுறு துரும்பெனத் தீய்ந்தன கண்தெளி!
வாயுறு வேட்கைகள் வதங்கி ஒழிந்தன
சாயுரு தெழுந்திரு சலிப்பிலே கண்தெளி! 5

தீந்தமிழ் உணர்வொளி தினவுறு தோள்களில்
பாய்ந்ததால் பழவினை பதுங்கின கண்தெளி!
ஆய்ந்தொளிர் நறுந்தமிழ் அடருமென் குருதியில்
ஏய்ந்ததால் எதிர்வினை எனக்கிலே கண்தெளி! 6

முத்தனை முறுவலார் மொய்விழி காட்டியே
தைத்தகம் வாட்டுதல் தகர்ந்தன கண்தெளி!
மெய்த்தவ மாகவே மேதினி மக்களைக்
கைத்தொடர்ந் துய்க்கவே கடுகினன் கண்தெளி! 7

செத்தொழி சிற்றுடல் சிதர்ந்தழி யாமுனம்
பத்தென நூறென படர்பல் லாயிரம்
கொத்தடர் படையினைக் குவலயம் யாவினும்
வைத்தொரு புரட்சியை வழங்கவே கண்தெளி! 8

# தமிழ்த்தாயே சொல்கிறாள்!

—தமிழவேள்

சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்த தனிப்பெருந் தமிழ்ச்சித்தரும், திருவருட்பா என்று வழங்கும் பல ஆயிரம் தேன் தமிழ்ப் பாடல் களைப் பாடியவருமான வள்ளற்பெருமான் என்னும் இராமலிங்க அடிகளார் தமிழ்மொழியின் உயர்வையும் சிறப்பையும் எவ்வளவு அழகாகச் சொல்கிறார் பாருங்கள் :

"இடப்பத்தையும் ஆரவாரத்தையும் பெருமறைப்பையும், போது போக்கையும் உண்டுபண்ணுகின்ற ஆரிய முதலான பாடை களில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும் அறிதற்கும் மிகவும் இலேசுடையதாய், பாடுதற்கும் துதித்தற்கும் மிகவும் இனிமையுடையதாய், சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய், திருவருள் வலத்தா ற் கிடைத்த தென்மொழி."

"ஆரியம், மகாராட்டிரம், ஆந்திரம் என்ற பற்பல பாடைகளைப் போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண் அளவு சுருக்கமாயும், ஒலி இலேசாயும், கூட்டு என்னும் சந்தி சுலபமாயும், எழுதவும் கவி செய்யவும் மிக நேர்மையாயும், அட்சர ஆரவாரம், சொல் ஆடம் பரம், போதுபோக்கு பெருமறைப்பு முதலிய பெண்மை அலங்கார மின்றி, எம்மொழியின் சந்தசுகளையும் தன் மொழியுள் அடக்கி ஆளுகையால், ஆண்தன்மை பொருந்தியதுமான தமிழ்."

பெர்சிவல் என்னும் ஆங்கிலத் துரைமகனார் தமிழ்மொழியின் உயர்வு சிறப்புகளைப் பற்றிக் கூறுவதைப் பாருங்கள் :

"Perhaps no language combines greater force with equal brerity; no human speech is more close and philosophic in its expression as an exponant of the mind. The language thus specific gives to the mind a readiness and cleaness of canception whilst its terseness and philosophic idoms offord equal means of lucid utterance." "உள்ளத்து உணர்வுகளை வெளியிடுவதில் (தமிழ்மொழியைப் போல்) வேறு எந்த மொழியும் மிகுந்த ஆற்றலும் அதற்கு இணையான சுருக்கமும் உடையதாக இல்லை, வேறு எந்த மாந்தரின் பேச்சும் (தமிழ் மாந்தரின் பேச்சைவிட) மிகுந்த நெருக்கமும் மெய்ம்மையும் பொருந் தியதாக இல்லை என்றே சொல்லிவிடலாம். அவ்வளவு செட்டாக அமைந்துள்ள (தமிழ்)மொழி உள்ளத்தில் எழும் எண்ணங்களுக்கு விரைவையும் தெளிவையும் தருகிறது. அதே நேரத்தில் அதனுடைய வளமும் மெய்ம்மை பொருந்திய சொற்றொடர்களும் அதற்கு இணை யான எளிய அழகிய நடையை நல்குகின்றன."

இவ்வளவு சிறப்புடைய தமிழ்மொழியைப் பாரதியாரோ ஆரிய மொழிக்கு அடுத்ததாகச் சொல்கிறார்; ஆரிய மொழிதான் உயர்ந்தது என்கிறார்; தமிழ்மொழி தோன்றுவதற்கு முன்னமே ஆரியமொழி இருந்தது; ஆரியமைந்தன் அகத்தியன் இருந்தான், அவன்தான் தமிழுக்கு இலக்கணம் செய்து கொடுத்தான் என்கிறார். எவ்வளவு தவறான தகவல்கள்.

தமிழைத் தாழ்த்தி வடமொழியை உயர்த்தி தமிழ் தன் தனித் தன்மையை இழக்கச் செய்வதற்கான முயற்சி, இன்று நேற்றன்று—ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகவே செய்யப்பட்டு வருகிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொண்டு தமிழ்நாட்டில் தமிழர்களோடு தமிழர்களாய் வாழ்ந்தாலும், தமிழினும் சிறந்தது—உயர்ந்தது—வடமொழியே என்று எண்ணும் ஒரு கூட்டம் தமிழ்நாட்டில் இருந்து வருகிறது. அந்தக் கூட்டத்தின் கரவான செயல்கள்தாம் தமிழுக்கு இடையூற்றையும் இன்னலையும் விளைவிக்கின்றன. அந்தக் கூட்டம் தமிழைப் பெருமைப்படுத்துவதுபோல் பேசிக்கொண்டே வட மொழிக்கு உயர்வு தேடுவதிலேயே நோக்கமாக இருக்கிறது. இதனைத் தமிழறிஞர் மணி. திருநாவுக்கரசு அவர்கள் இப்படி வெளிப்படையாகவே குறிப்பிடுகிறார்.

"இந்நாட்டிலே ஒரு சிலர் தமிழில் புலமை பெற்றுத் தமிழால் வயிறு வளர்த்தும், தமிழால் பொருள் ஈட்டியும், தமிழால் எல்லாச் சிறப்புகளை அடைந்தும் அதனைப் பாராட்டாமல், வடமொழியில் அகர உகரம் அறியாதிருப்பினும் அதனையே சீராட்டியும் பாராட்டியும் வருகின்றனர். தெலுங்கு கன்னடம் முதலான மொழிகளை ஆதரிப்பதில் எல்லாக் குலத்தாரும் ஒரே தன்மையான விருப்ப முடையவராக இருக்கின்றனர். ஆனால் தமிழுக்கோ என்றால், பார்ப்பனர் மெல்ல நழுவி விடுகின்றனர். இதற்குக் காரணம், தமிழ் வடமொழியை அடியோடு ஏற்றுக்கொண்டு அடிமையாகாமல் தனித்து நிற்கும் ஆற்றலுடைமை அவர்க்கு அழுக்காற்றை விளைத் தலேயாகும். அந்தோ! இவர் செய்கை கொடுமையினும் கொடுமை!" என்கிறார்.

தமிழ் மொழியைத் தனக்கு அடிமையாக்கிவிட வடமொழி எத்தனையோ முறைகளில் போராடுகிறது. ஆனால் அந்தப் போராட்டத்தில் வடமொழி இதுவரை வெற்றிபெறவில்லை. இனியும் வெற்றி பெறப் போவதில்லை.

கால்டுவெல் என்னும் ஆங்கிலப் பெருமகனார் சொன்னதைப் போல், "தமிழ்நாடே வடமொழியின் தோல்விக்களம்." தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் சொன்னதைப்போல், "தமிழினிடம் ஓர் இயற்கை ஆற்றல் இருக்கிறது. தமிழுக்கு அருட்டுணை இருக்கிற வரையிலே தமிழை எவராலும் அழிக்க முடியாது. தமிழ்த்தாய்

நம்மைக் காக்கிருள். தமிழ்த்தாய் பிறருக்கு மயங்காள். நம்மைப் பாதுகாக்க முனைந்து நிற்பது தமிழ்."

என்ருலும் தமிழைவிட உயர்ந்த மொழி வேறு இல்லை என்பதைத் தமிழர் ஒவ்வொருவரும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆரியம் தெய்வ மொழி என்ருல், இல்லை தமிழ்தான் தெய்வ மொழி என்று அடித்துச் சொல்ல வேண்டும். அருணகிரி நாதர் திருப்புகழில் பாடுகிருர் :

"கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழால் பகர்வோனே."

'கொன்றைச் சடையாராகிய—சிவபெருமானுக்கு ஓம் என்னும் மந்திரத்தின் உட்பொருள் தெளிவாகத் தெரியும்படிக் கொஞ்சிக் கொஞ்சித் தமிழ்மொழியால் சொல்கின்ற முருகப்பெருமானே," என்று பாடி, சிவபெருமானும் முருகப்பெருமானுமாகிய கடவுளர்கள் பேசிக் கொள்கின்ற மொழி தமிழே என்று சுட்டிக்காட்டி, ஆரிய மொழி தெய்வ மொழி என்போர்க்குச் சரியான மறுப்புரை தருகிருர்

தமிழைவிட உயர்ந்த மொழி ஒன்று உண்டு என்று யாரேனும் (பொய்) சொன்ஞல், தமிழர்கள் வெகுண்டெழுந்து அதனை மறுக்க வேண்டும் என்று தண்டபாணி சுவாமிகள் சொல்கிருர்.

"தமிழ் மொழிக்கு உயர்மொழி தரணியில் உளதெனின்
வெகுளியற்று இருப்போன் வெறும்புல வோனே!"

"தமிழைவிட உயர்ந்த மொழி ஒன்று உலகில் இருப்பதாக யாரேனும் கதை கட்டிவிட்டால் வெகுண்டு எழாமல் இருப்பவன் உண்மையான தமிழ்ப் புலவன் அல்லன்" என்கிருர்.

தனிப்பட்ட முறையில் நம்மை யாரேனும் தாழ்த்திப் பேசினுல்— பழித்துப் பேசினுல் அதனைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனுல் தமிழைத் தாழ்த்தி—தமிழைப் பழித்துப் பேசினுல் பொறுத்துக் கொள்ளலாமா? பாவலர் முடியரசன் பாடுகிருர் :

"முன்னைப் பழம்பொருளே—வேந்தர்
மூவர் உயிர்த் தமிழே!
கன்னற் சுவை யமுதே!—என்றன்
கண்ணின் மணி விளக்கே!
என்னைப் பழிப்பவனை — நான்
ஏதும் நினைப்பதில்லை
• ன்னைப் பழிப் பவனைப்—பகையாய்
உள்ளம் நினைக்குதம்மா!"

# மக்களவை

## 'நாடக' விளக்கம்

*0:235:* அன்புசால் ஐயா வணக்கம். தென்மொழி சுவடி 15 ஓலை 12-இல் பேரா. பா. திரு. க. ப. அறவாணர், 'சில புதிய செய்திகளும் பார்வைகளும்' என்னும் கட்டுரையிற் கூறியுள்ள வாறு 'நாடகம்' என்பது தமிழ்ச் சொல்லே என்பதிலும், தமிழி னின்றே வடமொழிக்குச் சென்று வழக்காருயது என்பதிலும் தடை யின்றெனினும் அச்சொல் பற்றிய அறவாணரின் ஆய்வு பிழை பாடுடையதாகும்.

*(1)* நாடகம் என்பதன் முதற் சொல்லாக 'ஆடு' என்பதைக் குறிப்பிடுகின்ற அறவாணர்—'ஆடு' என்பதன் பொருளை வரை யறுக்கவில்லை.

*(2)* அறவாணர் காட்டியுள்ளவாறு 'ஆன்றோர்' என்ற ஆகார முதற் சொல் சகர மெய் யேற்றுச் 'சான்றோர்' என்று வழங்குவது போலவே 'ஆடு' என்னும் ஆகார முதற் சொல்லும் சகர மெய் யேற்றுச் 'சாடு' என்று ஆகலாமே யன்றி, நகர மெய்யேற்று நாடகம் என்று ஆவது ஏன்? எவ்வாறு? என்ற விளக்கப் பெருத துடன் சான்றும் காட்டப் பெறவில்லை.

*(3)* அறவாணர் காட்டியுள்ள பிற சொற்களாகிய,

உமக்கு >(ந்) = நுமக்கு
உமது >(ந்) = நுமது
உம் >(ந்) = நும்
ஈர் >(ந்) = நீர்
ஈ >(ந்) = நீ

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தமிழைப் பழிப்பவரை நம் பகையாகக் கருதி அவர்களிடம் விழிப்போடு இருந்து, அவர்கள் மறைமுகமாகச் செய்கின்ற செயல் களை நாம் கண்காணித்து வரவேண்டும். அப்படிக் கண்காணித்து வந்திருந்தால் பாரதியார் இப்படிப் பாடியிருப்பாரா? அதுவும் தமிழ்த்தாயே சொல்கிருள் என்று தவறுன பொய்த் தகவல்களை— தமிழைத் தாழ்த்தி வடமொழியை உயர்த்திச் சொல்லும் கருத்து களைத்—தம் பாட்டில் புகுத்தியிருப்பாரா? என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். எண்ணிப் பார்த்து இனியாவது நாம் விழிப் போடு இருந்துவர வேண்டாமா? (முற்றும்)

ஆகியவற்றில் நகர மெய் பெற்ற 'நுமக்கு' முதலானவையே முந்தியவை என்பதும் நகர மெய் நீங்கிய 'உமக்கு' முதலானவை பிந்தியவை என்பதும் சொல்லாமலே போதரும்.

(4) பழங்காலத்தே கூத்தாகிய நாடகம் நடனமும் பாட்டு மாகவே இருத்திருக்க வேண்டுமாதலின், அது பற்றியே (**ஆடிப்** பாடுதல், நடனமாடுதல் போன்று) நாடகம் **ஆடுதல்** என்ற வழக்கும் ஏற்பட்டிருக்க வேண்டுமேயன்றி அவ் வாடுதல்' என்னும் வழக்கு நாடகத்தின் முதற் சொல் என்று காட்டப் பயன்படாது; அவ்வாறு காட்டுவதும் பொருந்தாது.

மாறுக, 'நாடகம்' என்னும் சொல் பற்றித் தமிழதிகாரி பாவாணர் அவர்கள் தம், 'பண்டைத் தமிழ நாகரிகமும் பண்பாடும் (பக் 150) என்ற நூலிலும், 'வடமொழி வரலாறு' (பக் 186) என்ற நூலிலும் எவ்வித ஐயப்பாட்டிற்கும் இடனின்றிக் கூறியுள்ளார். பாவாணர் கூறுகின்றவாறு,

நள்ளுதல் = பொருந்துதல், ஒத்தல்
நள் > நளி > நளிய = போல (உவம உருபு)
நளிதல் = ஒத்தல்

நடித்தல் = ஒத்து நடத்தல், நாடக நிகழ்த்தல், கூத்தாடு தல் என்னும் சொல்லாராய்ச்சியே (விரிவை மேற்குறித்த நூற்களில் காண்க) பிழை பாடற்றதும் உண்மையானதும் ஏற்றற்குரியதும் ஆகும்.

அறவாணர் கூற்றை ஏற்கப் புகின் நடி, நடம், நடனம் நட்டணம், நடிகன் முதலான சொல் வடிவ வளர்ச்சிகட்கு அமைதியும் கரணியமும் காட்ட வியலாது.

'Play' என்னும் ஆங்கிலச் சொல் '**போலச்** செய்தல்' என்பத னோடு தொடர்புடையதா என்பது தனியே ஆராய்தற்குரியது.

பேரா, எமனோவும் பரோவும் தம் திரவிடச் சொற்பிறப்பியல் அகர முதலியில் சில திரவிட மொழிகளில் ஈகாரம் முன்னிலை ஒருமைச் சுட்டுப் பெயராகவும் சுட்டுப் பெயரின் முதலெழுத்தாகவும் உள்ளமையைக் காட்டியுள்ளதைத் தேடிச் சான்று காட்ட விழை கின்ற அறவாணர் போன்ற நம்மவர்களும் பாவாணர் அதிகார மாய்க் கூறியுள்ளவற்றையும் ஏற்காமலும் எடுத்துக் காட்டாமலும் பிழைபடுவது ஏனோ?

இறுதியாக ஒன்று. உண்மையை வெளிப்படுத்தும் முயற்சியே ஆராய்ச்சி எனின் தமிழியலாய்வாளரனைவரும் தம் ஆய்வு முடிவு களை வெளிப்படுத்து முன்னர்ப் பாவாணர் தம் முடிவை உரை கல்லாய்க் கொள்க.

கு. **பூங்காவனம்**, வெங்காளூர்-1.

# ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்!

மருத்துவ அறிஞர். கோ. கோவிந்தனார்.

அலித் தன்மை உடைய ஒருவன் முழுக்க முழுக்கக் கரு உறச் செய்யும் ஆற்றல் உடையவனாக இருக்கலாம்; ஆண் குறியின் எழுச்சி சிறிது நேரமே நிற்பினும்; ஒளிநீரை விரைவாக வெளியேற்றினும், அல்லது ஒளிநீரே வெளியேறுவிடினும், அவனுடைய ஒளிநீரில் சுறுசுறுப்பான. உயிர் உள்ள ஆண் கரு உயிர்கள் நிரம்பி இருக்கலாம். கரு உறச் செய்ய, இயல்பாக ஆண்மைத் தன்மையும். கரு உறச் செய்யும் தன்மையும் வேண்டற்பாலன. அலித்தன்மை, உடைய, ஆனால் கரு உறச் செய்யும் ஆற்றலுடைய ஒருவருடைய ஒளிநீரை பீச்சாங்குழல் மூலம், அவருடைய மனைவியின் கருப்பையில் பீச்சினால் அவர் மனைவி கருத்தரிக்கலாம். இம்முறை செயற்கை முறைக் கருத் தரித்தல் எனப்படும். அலித்தன்மை, மலட்டுத்தன்மையைவிட நன்கு உணரக்கூடியது. துன்பம் தர வல்லது. மலட்டுத்தன்மை உடையவருக்கு தான் மலடு என்பதே தெரிவதில்லை. மனைவியின் மலட்டுத் தன்மைபால்தான் கருத்தரிக்க வில்லை என நினைந்து மனைவியைத் துன்புறுத்தா நிற்பர்.

அலித் தன்மைக்கும், கலவி மரத்தலுக்கும் வேறுபாடு அறிவது நன்மை பயக்கும். கலவி மரத்தல் என்பது நரம்புத் தளர்ச்சியால் ஏற்படுவதாகும். இடைவிடாத உழைப்பாலும், அதனால் ஏற்படும் களைப்பாலும் நரம்புத் தளர்ச்சி அடைகின்றது. கலவி மரத்தல், நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ பாலை அடிப்படையாகக் கொண்டது. இது கலவி வேலைகளையும், கலவி உறுப்புகளையும் தாக்குகின்றது. அத்துடன் நில்லாமல் உடலில் உள்ள ஒவ்வோர் உறுப்பையும் தாக்குகின்றது. உடம்பு முழுவதையும் தளர்ச்சி அடையச் செய்கின்றது. கலவி உறுப்புகள் பிழையான வழிகளில் பயன் படுத்தப்படுவதாலும், நோயாலும், கலவி உறுப்புகளில் ஏற்படும் மாற்றங்களாலும் இந்நோய் உண்டாகலாம். இக்கால நாகரீகத்தால் ஏற்படும் கேடுகளாலும், சிறு அகவையிலேயே பால் உணர்ச்சி தூண்டப்படுவதாலும், தலைமுறை, தலைமுறையாகவும் இந்நோய் உண்டாகலாம். இதற்கும் அலித் தன்மைக்கும் எவ்வகைத் தொடர்பும் கிடையாது. இவை இரண்டும் ஒன்றன்று. கலவி உறுப்புகளிலோ, அல்லது கலவி வேலைகளிலோ கோளாறு இல்லாமல் கலவி மரத்தல் ஏற்படுவதே இல்லை. அலித் தன்மை உள்ளவர், கலவி மரத்தல் தன்மை உடையவராக இருக்க வேண்டும் என்பதில்லை. அலித் தன்மை உள்ள மாந்தன் தன் அன்றாட வேலைகளில் சுறுசுறுப்பாகவும் விரைவாகவும் இருப்பதைப் பார்க்கின்றோம்

அலித் தன்மை கலவி மரத்தலால் உண்டாகிறது என்றோ, கலவி மரத்தல் அலித் தன்மையால் உண்டாகிறது என்றோ கொள்ள இடமில்லை. கலவி மரத்தல் உண்டாவதற்குக் காரணம், பலர் பலவாறுகக் கூறுகின்றனர். சிலர் இதை மனத்தால் ஏற்படும் கோளாறு என்றும், சிலர், கலவி உறுப்புகளில் குறிப்பாகக் கலவி உறுப்பு — சிறுநீர் – வழியில் எங்கோ ஒரு இடத்தில் தடையோ, காயமோ ஏற்படுவதால் உண்டாகிறது என்றும் கூறுகின்றனர்.

அலித் தன்மையை நுணுகி ஆராய்ந்தால் அஃது ஒரு நோய் அன்று என்பது புலனுகும். மனக் கோளாறுல், நரம்புக் கோளாறுல், உடல் கோளாறுல், காயங்களால், உறுப்புகள் ஒத்துழையாமையால் ஏற்படும் கேடுகளால் உண்டாக்கப்பட்ட விளைவுதான் அலித் தன்மை. காயத்தை மருந்திட்டு ஆற்றுவது போன்று அவ்வளவு எளிதாக அலித் தன்மைக்கு நேரிடையாக மருத்துவம் செய்ய இயலாது. அலித் தன்மை வரக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடிக்க மிகுந்த பாடுபடவேண்டும். சில வேளைகளில் காரணத்தைக் கண்டுபிடிப்பதற்குள் போதும் போதும் என்று கூட ஆகிவிடும். மருத்துவம் செய்யும் பொழுதும் மிகுந்த பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும். மூப்பால் ஏற்படும் அலித்தன்மையைப் போக்குவது கடினம். அலித் தன்மை உள்ள சிலருக்கு என்ன மருத்துவம் செய்யினும் பயன் ஏற்படுவதில்லை. பெரும்பான்மையோருக்கு சரியான மருத்துவ முறையால் நன்மை ஏற்படுகின்றது. இதை யாரும் மறுக்க முடியாது

அலித்தன்மையை, தொடக்க அலித்தன்மை, முற்றிய அலித் தன்மை என இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். பெரும்பான்மையோர் துன்புறுவது தொடக்க அலித்தன்மையால்தான். இஃது உண்டாகக் காரணம் என்ன என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை, இது மன அலித்தன்மை எனவும் அழைக்கப்படும். முற்றிய அலித் தன்மையைப் பொதுமக்கள் கூட அறிந்து கொள்வது எளிது. கலவி உறுப்புகளிலோ அல்லது அவற்றின் அமைப்புகளிலோ, குற்றமோ, காயமோ அஃதாவது கலவி உறுப்புகளில் ஒன்றோ அல்லது முழுவதுமோ பிறக்கும் பொழுதே இல்லாதிருந்தாலோ அல்லது இடையூறுகளினல் அழிக்கப்பட்டாலோ இத்தன்மை உண்டாகிறது. கருவில் இருக்கும் பொழுது, கலவி உறுப்புகளிலோ அல்லது அவற்றின் முதன்மையான பகுதிகளிலோ கோளாறு ஏற்பட்டாலும் இத்தன்மை ஏற்படும். கலவி உறுப்புகளின் இல்லாமையாலும். அல்லது அவை திறம்பட வேலை செய்ய, வேண்டிய ஏந்து இல்லாதிருந்தாலும் இத்தன்மை ஏற்படலாம். 'பிட்யூட்டரி' சுரப்பியிலிருந்து வரும் 'கார்மோன்' கலவி உறுப்புகள் வேலை செய்வதற்கு மிக இன்றியமையாதது. இந்த கார்மோன் கலவி உறுப்புகளுக்குப் போய்ச் சேராவிட்டால் அவை வேலை செய்யா. ஆகவே முற்றிய அலித்

தன்மை உண்டாகிறது. முற்றிய அலித்தன்மையை உறுப்பு அலித் தன்மை என்றும் கூறுவர். முற்றிய அலித்தன்மையை அது பிறக்கும் இடங்களைக் கொண்டு ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

1) பிறவிக் கோளாறுகளினால் உண்டாவது.
2) 'என்டோகிரைன்' சுரப்பிகளில் அஃதாவது தூம்பற்ற சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகளால் உண்டாவது.
3) நடு நரம்பு மண்டலத்தில் அஃதாவது மூளையிலும், முதுகுத் தண்டிலும் ஏற்படும் நோய்களாலும், காயங் களாலும் உண்டாவது.
4) நோய்களாலும், நோய் நிலைகளாலும் உண்டாவது.
5) கலவி உறுப்புகளில் உள்ள அல்லது ஏற்படும் கோளாறு களால் உண்டாவது.

இவை ஒவ்வொன்றையும் சிறிது ஆராய்வோம்:

## 1. பிறவிக் கோளாறுகள் :

பிறவிக் கோளாறுகளால் ஏற்படும் அலித்தன்மை பலவகைப் படும். அவற்றில் முதன்மையானவை: ஆண்குறி இல்லாமை, ஆண்குறி மிக மிகச் சிறிதாய் இருத்தல், ஆண்குறியின் பூ இல்லா திருத்தல், ஆண்குறியிலுள்ள எழுச்சிப் பொருள்கள் இல்லாதிருத்தல், வித்துகள் தோல் பைக்குள்ளேயே வளர்தல் ஒரு சிறுநீர்ப்புற வழிக்குப் பகரமாக இரண்டு சிறு நீர்ப்புற வழிகள் இருத்தல், சிறு நீர்ப்புற வழியே இல்லாதிருத்தல்; சிறு நீர்ப்புற வழி ஆண்குறியின் பக்கவாட்டிலாவது, கீழ்ப் பக்கமாவது திறத்தல், சிறுநீர்ப்புற வழியில் பிறவியிலேயே துளை ஏற்பட்டிருத்தல், சிறுநீர்ப்புற வழியில் பிறவியிலேயே சுருக்கம் ஏற்பட்டிருத்தல், சிறுநீர்ப்பை விலகி இருத்தல், ஆண் பெண் இருபால் உறுப்புகளுமே இருத்தல், இரண்டு ஆண்குறிகள் இருத்தல், ஆண்குறியில் எலும்பு வளர்ந்திருத்தல், ஆண்குறியின் பூவிற்கும் மேலே போர்த்து உள்ள தோலுக்கும் இடை யில் குட்டையான அழுத்தமான இணைப்பு ஏற்படல் முதலியவை யாகும். மேலே குறிப்பிடப்பட்டவை பொதுவாக உண்டாகக் கூடிய கோளாறுகள். மக்களிடையே இக்கோளாறுகள் மிகமிக அருகியே காணப்படுகின்றன. இக்கோளாறுகளில் பலவற்றை அறுவை மருத்துவத்தின் மூலம் நலமாக்கி விடலாம். மிகச் சிறிய ஆண்குறி உடலின் உள்ளே அமைந்துள்ள சுரப்பிகளில் ஏற்படும் கோளாறுகளினால் உண்டாகிறது. ஆகவே இக்குறையை நீக்குவது மிகக் கடினம்.

(தொடரும்)

# என் இலங்கைச் செலவு

**பெருஞ்சித்திரனார்.**

மாலை ஊர்வலத்திற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நடந்து கொண்டிருந்தது. பண்டிதர் அவர்கள் அடிக்கடி வருவார் போவாரிடத்தி லெல்லாம் மாநாட்டு நிகழ்ச்சிகளை முன்னதாகப் போய்க் கவனிக்கும்படியும், மாநாட்டு ஊர்வலத்தில் கலந்துகொள்ள அவ்வவ் வட்டார அன்பர்களுடன் அணியணியாய் வரும்படியும் கேட்டுக்கொண்டிருந்தார். அடிக்கடி தொலைபேசி அழைப்புகள் வந்தன. பண்டிதர் வீட்டில் ஏதோ திருவிழாவுக்குப் போவதுபோல் ஒரே பரபரப்பு.

"நீங்கள் இன்று கொஞ்சம் முன்னதாகவே பகலுணவு எடுத்துக் கொண்டு, சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். ஊர்வலத்திற்குச் சரியாகப் பிற்பகல் நான்கு மணிக்குப் புறப்பட வேண்டும். இடையிடையே அன்பர்கள் வந்து தொல்லை கொடுத்தாலும் கொடுப்பார்கள்" என்று பண்டிதர் அவர்கள் என்னிடம் கூறினர். எனவே சரியாக ஒருமணியளவில் உணவுண்ண அழைத்தார்கள்.

வழக்கம்போல் உணவு பரிமாறப் பெறும் சாப்பாட்டு மிசையருகில் போய் உட்கார்ந்தேன். பண்டிதர் அம்மையார் அதே கூடத்தில் சற்றே தொலைவிலிருந்து வேறொரு மிசையைக் காட்டி, அந்த மிசையில் போய் அமர்ந்து கொள்ளுங்கள்' என்றார். 'ஏன், இந்த மிசையில்தான் நேற்றெல்லாம் அமர்ந்து சாப்பிட்டோம்' என்றேன். இது மரக்கறி உணவு மிசை; அது புலால் உணவு மிசை' என்றார்கள். உடனே பக்கத்திலிருந்த இராமலிங்கம் சிரித்தார். பண்டிதர் மகன் நிமலன் 'இன்று ஐயாவினால் எங்களுக்கும் கறியுணவு கிடைக்கப் போகிறது. என்று மகிழ்ச்சியொடு கூறினர். எனக்கு வியப்பாக இருந்தது. பண்டிதரும் அம்மையாரும் புலால் உண்ணாதவர்கள்; தூய சைவம். அங்கெப்படிப் புலால் உணவு வந்தது என்று திகைத்தேன். அம்மையார் சொன்னார்கள், 'இன்று இராமலிங்கம் வீட்டிலிருந்து இவை செய்து கொண்டு வரப் பெற்றன; சாப்பிடுங்கள் ஐயா' என்று. எனக்கு அவர்களின் அன்பு மிகவும் வியப்பளித்தது. உணவைப் பரிமாறுதலும் செய்தார்கள். பண்டிதர் அவர்கள் அடிக்கடி வந்து, 'இன்றைக்குச் 'செட்டியார்' வீட்டுக் கறி; நிறையச் சாப்பிடுங்கள்' என்று கூறிக் கொண்டிருந்தார். 'காரம் மிகுதியாக இருக்கும்; ஆனால் இன்றைக்குக் கொஞ்சம் குறைவாகவே வைக்கும்படி சொன்னேன்' என்று இராமலிங்கம் கூறினர். அவர்கள் அனைவரும் அன்புடன் இட்ட உணவை நிறைவாக உண்டேன்.

## 18. முதல் நாள் மாநாட்டு நிகழ்ச்சிகள்

உணவு முடிந்து சிறிது நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு, சரியாக நான்கு மணியளவில் பண்டிதர், நான், ஓகநாதன், இராம

லிங்கம், நிமலன் அனைவரும் மலையுந்தில் புங்குடு தீவு புறப்பட்டோம். வேலணையிலிருந்து புங்குடு தீவுக்குள்ள பாலம் மூன்று கற்கள் இருக்கும். மாநாடு புங்குடு தீவு உயர் கல்விக் கூடத்தில் (மகா வித்தியாலயத்தில்) அமைக்கப் பெற்றிருந்த திருவள்ளுவர் அரங்கில் நடைபெறவிருந்தது.

மாலை **5** மணியளவில் அங்குள்ள முருகன் கோவிலிலிருந்து திருக்குறள் சுவடி ஊர்வலம் புறப்பட்டது. மலர்களாலும், படிமங்களாலும்—சுவடிக்கப் பெற்ற அழகிய சிறு தேரில் திருக்குறள் நூல் ஒன்று வைக்கப்பெற்றுத் தேரைச் சிலர் தூக்கி வந்தனர். தேருக்கு முன்னால் பண்டிதர் அவர்களும் நானும் மற்றும் சிலரும் மாலை யணிவிக்கப் பெற்று வந்து கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்னால் சீருடை அணியப் பெற்ற மாணவ, மாணவிகள் பெரு ஊர்வலமாகச் சென்றனர். ஆசிரியர்கள் அணிவகுத்துச் சென்றனர். ஊர்வலத்தின் பின்புறம் பொதுமக்கள் வந்தனர். ஏறத்தாழ இரண்டு படைச்சால் அளவு ஊர்வலம் நீண்டிருந்தது. ஊர்வலம் திருக்குறள் அரங்கை அடைய அரை மணி நேரம் ஆனது. உயர் பள்ளிக் கட்டடத்தின் முன்புறம் இரண்டு குழிகள் வெட்டப்பெற்றிருந்தன. அவற்றில் என்னைக் கொண்டு ஒரு தென்னங் கன்றை நடச் செய்தனர். அதன் பின்னர் வரவேற்புக் கூட்டம் நடந்தது. வரவேற்புக் கூட்டத்தில் திரு. **ஈழவேந்தன்**, திரு. **கோவை மகேசன்,** பண்டிதர் முதலியோர் பேசினர். அதனை யடுத்து மாநாட்டு அரங்கை அடைந்தோம். மாநாட்டு அரங்கு திறந்த வெளியில் அமைக்கப் பெற்றிருந்தது. 7 மணி யளவில் கூட்டம் நிறைந்திருந்தது. நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாண வளாகத் தலைவர் பேராசிரியர் **சு. வித்தியானந்தன** தலைமை தாங்கினார். திரு. **க. திருநாவுக்கரசு** வரவேற்புரை யாற்றினார். அதன் பின்னர் தலைவர் பேசுகையில், ‘திருக்குறள் தமிழினத்தின் ஒப்பற்ற பொக்கசம். உலகனைத்தும் போற்றும் இந்த உயரிய நூலில் திருவள்ளுவர் கையாண்டுள்ள உவமைகள் நம்மனைவர்க்கும் நன்னெறி காட்டுவனவாக அமைந்துள்ளன. தமிழர் தம் பண்பாட்டை, வாழ்க்கை நெறியினை வள்ளுவர் குறளில் காணலாம். காலத்தின் தேவையினை ஒட்டி எழுந்த குறள் கால, தேச, நிகழ்ச்சிகளைக் கடந்து நிற்கிறதென்றால், மக்கள் வாழ்க்கைக்குரிய பல்வேறு பொருள்களை அது தன்னுள் அடக்கியுள்ளமையே காரணமாகும்’ என்றார். பின்னர் திரு. சி. **மௌனகுரு** பேசுகையில், வள்ளுவர் வாழ்ந்த காலத்தில் தமிழகத்தை நன்னெறிப்படுத்த அறநூலொன்று தேவைப்பட்டதென்றும் அத்தேவையினை ஈடுசெய்யும் வகையிலேயே திருக்குறள் எழுந்ததென்றும் கூறினார். இடையில் தமிழினத் தலைவரும் இலங்கைப் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும் ஆகிய திரு. **அமிர்தலிங்கம்** அவர்களும் அவர்களின் துணைவியார் திருவாட்டி. மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் அவர்களும் வந்து கலந்து கொண்டனர்.

அதன்பின், வித்துவான். திரு. **சி. ஆறுமுகம்** அவர்கள், 'வள்ளுவர் கண்ட பொதுமையும் புதுமையும்' என்பது பற்றியும், யாழ்வளாகத் துணை நூலகர், திரு. **ஆ. சிவநேயச் செல்வன்** அவர்கள் 'வள்ளுவர் தோற்றமும் குமுகாய மாற்றமும்' என்னுந் தலைப்பிலும், பண்டிதர் திரு. **க. மயில்வாகனம்** அவர்கள் 'திருவள்ளுவர் கண்ட சுமைகள்' என்பது பற்றியும்; பண்டிதர் திரு. **இயேசுசபை வண. யோசேப் மேரி அடிகள்** 'வள்ளுவர் வழி' என்பது பற்றியும், திரு. சி. **சடாட்சர சண்முகதாசு** அவர்கள் 'திருவள்ளுவர் கருத்தும் இன்றைய ஊழியும்' என்னும் பொருள் பற்றியும் விரிவுரையாற்றினர். பின்னர், செந்தமிழர் இயக்கச் செயலாளர் திரு. **வி. பொன்னம்பலம்** அவர்கள் உரையாற்றுகையில் இன்றைய புதிய காலத்திற்கேற்ற பல கருத்துகளை வள்ளுவரின் குறளில் காண முடிகிறது என்றும், செல்வத்தை எப்படித் தேட வேண்டும், எவ்வகையில் பங்கீடு செய்ய வேண்டும் என்னும் கருத்துகளும் வள்ளுவர் குறளில் காணப்படுகின்றன என்றும், பின்னை நாட்களில் காரல் மார்க்சு, இலெனின் போன்ற பொதுவுடைமையாளர்கள் கூறிய நிகரமைக் கருத்துகளைத் திருவள்ளுவர் அன்றே தமது நூலில் குறிப்பிட்டுள்ளமை போற்றற் குரியதென்றும் விரிவாக எடுத்துரைத்தார்.

திரு. **அமிர்தலிங்கம்** அவர்கள், திருக்குறள் மாநாட்டுச் சிறப்பு மலரை வெளியிட்டுப் பேசுகையில், தமிழனின் தனிப்பெரும் சொத்தான திருக்குறள் தமிழனின் வாழ்வுக்கு வழிகாட்டும் ஒப்பற்ற நூல் என்றும், தமிழனுக்கென சொந்த ஆட்சியிருந்திருந்தால் திருக்குறளின் பெருமையை உலகம் இன்னும் கூடுதலாக அறிந்திருக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். தமிழ்மறைக் கழகம் வெளியிட்ட பதினெட்டாவது திருக்குறள் மாநாட்டு மலரின் முதல் படியை திரு. **வி. இராமநாதன்** அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இறுதியில் ஏறத்தாழ இரவு 8 மணியளவில் என் சொற்பொழிவு தொடங்கியது. திரு. அமிர்தலிங்கம் அவர்களும் திருவாட்டி. மங்கையர்க்கரசி அவர்களும் என் உரையை இறுதிவரை அமர்ந்திருந்து மிக்க ஆவலுடன் செவிமடுத்துக் கேட்டனர். கூட்டம் நிகழ்ச்சி முடியும் வரை அமைந்து கேட்டது. இலங்கையில் இதுவே என் முதற் சொற்பொழிவாகையாலும் மக்கள் அதுவரை என்னைப் பற்றி மிகவும் அறிந்திராதவர்களாகையினாலும், மிக அமைதியாக இறுதிவரை இருந்தனர் கடற்காற்று இடையிடையே சிறிது தொல்லை தந்தாலும் கூட்டம் கலையாமல் இருந்தது குறிப்பிடத் தக்கது. என் சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு:

"தமிழகத்தில் அரசியல், குமுக, பொருளியல் துறைகளில் ஒரு தாழ்வு நிலை ஏற்பட்ட காலக்கட்டத்தில் திருவள்ளுவர் தோன்றினர். தமிழ்ப் பண்பாடு, ஒழுக்கம் சீர்குலையும் நிலையினை அவர் கண்டார்.

அந்நிலைமையினை மாற்றுவதற்காகத் தமிழினத்திற்கு வாழ்வாங்கு வாழும் நெறியினைக் கற்பிப்பதற்காகவே அவர் திருக்குறளைப் படைத்தார். அந்நெறி தமிழர்களுக்கு மட்டுமன்றி, உலக முழுமைக்கும் பொதுவான வாழ்க்கைநெறி என்று போற்றப் பெறுகின்றது. அவர் கூறிய கருத்துகளை —அவற்றின் பெருமையினை, அருமையினை இன்றும் கூட அறியாத பலர் நம்மிடையில் வாழ்கின்றார்கள். அது குறித்து நாம் வருந்தாமல் இருக்க முடியாது. பிறநாட்டவர்கள் திருவள்ளுவரைப் பற்றி அறிந்து கொண்ட அளவுக்குக் கூட, தமிழகத்தில் வாழும் மக்கள் பலர் அறிந்து கொள்ளவில்லை. ஏனெனில் நம்மவர்க்கு அந்த உணர்வு இல்லை. சாதியுணர்வு, மத வுணர்வு பெருகியுள்ள அளவுக்கு, நம்மவர்களிடம் தமிழுணர்வு, தமிழின உணர்வு இல்லை. அந்த உணர்வுகள் வளர வேண்டும், திருக்குறளின் பெயரால் தமிழினம் தன்னுணர்வு பெறவேண்டும்.

'ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று வாழ்ந்த தமிழினத்தின் நடுவில், என்று சாதி வேறுபாடுகள், வருண வேறுபாடுகள் தலையெடுக்கத் தொடங்கினவோ, அன்றே தமிழனுக்குச் சீரழிவு தொடங்கியது. அவ்வாறு சாதி மத வேறுபாடுகளின் தாக்குதல்களால் தமிழினம் அழிந்துபட விருந்த நேரத்தில்தான், அந்த அழிவுகளிலிருந்து தமிழினத்தைத் தடுத்துக் காப்பாற்றும் நோக்குடன் முதற்குரல் கொடுத்தவர் திருவள்ளுவர். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று அன்றே எடுத்துக் கூறி சாதிச் சழக்குகளுக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கி வைத்தார். இவ்வகையில் தமிழின அழிவைத் தடுத்து நிறுத்துவதற்காக எழுந்த முதல் புரட்சி நூலே திருக்குறள். முதல் புரட்சியைத் தொடங்கிய முதல் புரட்சியாளரே திருவள்ளுவர்.'

'திருக்குறள் வாழ்க்கைக்குரிய நூல். வாழ்வாங்கு வாழ வழி காட்டும் நூல். பொழுது போக்கிற்காகவோ, வெறும் அறிவுக்காகவோ திருக்குறளைக் கற்பதை விடுத்து, வாழ்க்கைக்காக அதனைப் படியுங்கள். வாழ்க்கைக்குப் பயன்படாத இலக்கியங்கள் நமக்கு வேண்டா. வாழ்க்கைக்குப் பயன்படத்தக்க நூல்களே இன்று நமக்குத் தேவை. உலக மக்கள் அனைவர்க்கும் பயன்படத்தக்க ஒரு நூல் உண்டென்றால் அது திருவள்ளுவரது குறள் ஒன்றே என்று நான் கூறுவேன்.'

'வெறும் அறிவியல் வளர்ச்சியினால் மட்டும் மாந்த குலம் நிறைவடைந்து விட முடியாது. அறிவியல் வளர்ச்சிக்கு எல்லையில்லை. உலகில் இன்று பல நாடுகள் அறிவியல் வளர்ச்சியில் வியத்தகு செயல்கள் பலவற்றை நிலைநாட்டியுள்ளன. அவ்வாறு, அறிவியல் வளர்ச்சியில் மிக முன்னணியில் நிற்கும் நாடுகளில் எல்லாம் இன்று ஒரு புதுவகை நோய் ஒன்று தோன்றிப் பரவி வருகிறது. உள நோய்தான் அது. வெறும் அறிவு வளர்ச்சியோ, உடல் வளர்ச்சியோ மாந்தனின் முழு வளர்ச்சியாகி விட முடியாது. உள்ளமும்

அதற்கு ஏற்ப வளர்தல் வேண்டும். உள்ளந்தான் பண்புகளின் உறைவிடம். உள்ளம் வளராவிட்டால் நாம் காண்கின்ற அறிவியல் வளர்ச்சியினால் பயன் எதுவுமே கிட்டாது. உள்ளப் பண்புகள் வளர்வதற்குச் சிறந்த நூல்களே துணை புரிய வல்லன. திருக்குறளே உள்ளப் பண்பு வளரவும், மாந்த குலமனைத்தையும் ஒன்றுபடுத்தவும் மேம்படுத்தவும் ஆன சிறந்த பல கருத்துகளைக் கொண்டிலங்கு கின்றது. அதுவே நமக்கு நல்ல வழிகாட்டியாகும். அதனை அறி வுக்காக மட்டும் கற்காது வாழ்க்கைக்காகவும் கற்கவேண்டும். திருக் குறளைப் போலும் வாழ்க்கையைக் கற்பிக்கும் நூல்களே இன்று இவ்வுலகிற்கு வேண்டும்.

மக்கள் என்ன கருத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அத்தகைய கருத்துகளையே நாம் கொடுக்க வேண்டும். இலக்கியம் வாழ்க்கைக்குரியது. நல்வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும் அது. திருக்குறள் நமக்குக் கிடைத்த மிக நல்ல இலக் கியம்; உயர்ந்த வாழ்வு நூல்; சிறந்த நெறிமுறைகளை மக்கள் குலம் அனைத்திற்கும் பொதுவாகக் கற்பிக்கும் பீடுயர்ந்த அறநூல்.''

என் சொற்பொழிவு ஏறத்தாழ இரண்டரை மணி நேரம் நிகழ்ந் தது. இரவு 10-30 மணி அளவில் கூட்டம் நிறைவுற்றது. அங் கிருந்து திரு. அமிர்தலிங்கம் அவர்களின் மனையுந்தில், இரவு உணவு கொள்ளும் இடத்திற்குப் போனோம். 'சர்வோதய' அலுவலகத்தில் அனைவர்க்கும் இலங்கைச் சிறப்புணவாகிய இடியாப்பமும் பாலும் பரிமாறப்பெற்றன. இரவு 12 மணி யளவில் உணவு முடிந்து வேலணை புறப்பட்டோம். திரு. அமிர்தலிங்கம் துணைவர்கள் தங்கள் வண்டியிலேயே என்னை அழைத்துச் சென்றனர். திரு. அமிர்த லிங்கமே வண்டியை ஓட்டிக்கொண்டு வந்தார். இடையில் அமிர்த லிங்கம் அவர்கள் பலவகைப் பேச்சுகளுக்கிடையில் தம் மனைவி, நன்கு பாடுவார் என்று கூறினார். உடனே மகிழ்ந்து, அம்மை யாரைப் பாடக் கேட்டுக் கொண்டேன். அவர்களும் இசைந்து தம் இனிய குரலில் தமிழீழ விடுதலைப் பாவலர் காசியானந்தனின், 'ஈழ வாழ்த்து', 'தமிழ்மொழி காக்க உறுதி' ஆகிய இரண்டு பாடல் களையும் எழுச்சியுடன் பாடிக்கொண்டு வந்தார்கள். அந்த இரவு நேரத் தில், உடலைக் குளிர்விக்கும் அருமையான காற்றோடு காற்றாகக் கரைந்து வந்து என் உள்ளத்தை மகிழ்வித்த அந்த இனிய பாடல் களையும், அவற்றை இசைத்து வெளிப்படுத்திய அம்மையாரின் வீறு மிக்க குரலையும் இன்றும் நினைந்து புத்துணர்வெய்துகின்றேன்.

பண்டிதர் வீட்டுக்கு வந்து எங்களை விட்டு விட்டு, அமிர்த லிங்கம் துணைவர்கள் அந்த நள்ளிரவுப் பொழுதிலேயே யாழ்ப் பாணம் சென்றனர். வீட்டில் பண்டிதர் குடும்பம் என் சொற் பொழிவை வெகுவாகப் பாராட்டியது; எல்லாரும் மகிழ்வுற்றனர். அன்று இரவு படுக்கைக்குச் செல்லும் பொழுது மணி இரண்டு இருக்கும்.

(தொடரும்)

## நாங்கள் தேசப்பகைவர்கள்!

(பாவியலுரை) —இரணியன்

[தேசம் என்பது என்ன?
சுவரில் தொங்கும் உலகவரைவுப் படங்களா?
இல்லை!
அப்படி இருந்தால், அவற்றுக்குப்
பற்றாளரும் பகையாளரும் இருக்கவியலாது!
பிறகென்ன?
நீரும் மண்ணும் நிலத்திணைகளும் என்பனவற்றால்
இயன்ற உலகவுருண்டையின் புறப்பரப்பா?
அப்படியும் இருக்கவியலாது!
ஏனெனில், இதற்கும்
பற்றாளனும் பகையாளனும்
மாந்தன் இருப்பது இயலுமையற்றது!
பிறகு, தேசம் என்பது என்ன?
தேசம் என்பது, ஒரு பெரும் நிலப்பரப்பில்
வாழும்
மக்கட்குழுமமே!
தேசப்பற்றாளரும் தேசப்பகைவரும்
மக்கட் பற்றாளரும் மக்கட்பகைவருமே!
ஆனால், ஆட்சியாளரோ—
தங்கள் சார்பாளரைத் தேசப்பற்றாளர் எனவும்,
தங்கள் எதிர்ப்பாளரைத் தேசப்பகைவர் என்வும்....
கூறியே வந்தனர்! வருகின்றனர்!! வருவர்!!!
இது வரலாற்றுண்மை!
இந்நாள் உலகின் தனியுடைமைக்
கொடுங்கோன்மை நாடுகளில், எண்ணிலா
மக்கள்நேயர்கள், சுரண்டல் ஆட்சியரால்
தேசப்பகைவர்கள் எனக் குற்றம் சுமத்தப்பட்டுப்
படுகொலை செய்யப்பட்டனர்! செய்யப்பட்டு
வருகின்றனர்!
இங்கே எழுந்தோடும் உணர்வுக் குழம்புகள்—
மக்கள் நேயர்களுள் ஒருவனின் உள்ளத்தி
னின்றும்
வெளிப்பாய்ந்தவை! தேசப்பகைக் குற்றம்
சுமத்தப்பெற்ற
அவன் உணர்வுகளும், அவன் இயக்கக்
கனல்வுகளும்.. ]

நாங்கள் தேசப்பகைவர்கள்!
ஓ! சுரண்டல் கும்பலே! நாங்கள் தேசப்பகைவர்களே!
மாக்கொலைகளைச் செய்வதற்கு உரிமமும்
கைகளிலும் தோள்களிலும் முனைக்கத்தியுடன்கூடிய

துமுக்கிக் குழல்களும்
பொய் வழக்குகளையே புனைவதில் நல்லதேர்ச்சியும்
வெங்கொடுமைகளையெல்லாம் செய்வதில் நல்ல பயிற்சியும்
கொண்ட
கறும்பச்சை உடைக் காவற்புலிகளும்,

இவர்களால் காவல் காக்கப்பெறும்
பல்வேறுவகைச் சுரண்டல் கொள்ளையரும்,

இக்கொள்ளையரின் கூட்டுமுயற்சியால் உருச்சமைக்கப்பட்ட
அரசு என்னும் அட்டுழியக் கூட்டமும்,
கொள்ளையரின் கூலிப்பட்டாளமும்,
கொள்ளையரின் அகப்புறத் தரகரும்,
ஆகிய இவர்கள் அடங்கிய தொகுப்பே
தேசம் என நீங்கள் செப்புவீர்க ளெனில்... ...
ஓ! கொலைக் கும்பலே!
மக்களினத்தின் மாப்பகைக் கூட்டமே!
நாங்கள் தேசப்பகைவர் தாம்!

எங்களை மிகமிக நேசிப்ப வர்களும்,
எங்களின் நேசத்திற்கு என்றும் உரியரும்
உங்களால் மிகமிக ஒடுப்பட்டவர்கள்!
உங்களுக் கே தம் உழைப்பை ஈந் தவர் கள்!
உழைப்பினை ஈந்தே உருக்குலைந் தவர்கள்!
உருக்குலைந் துடலில் உயிர்ப்பிழந் தவர்கள்!
எண்ணிக்கையிலோ —
உங்களை விடவும் ஒருகோடி மடங்கினர்!
எனினும் உங்கட்கே உழைத்துழைத் துருகி
ஒட்டிய வயிற்றுடன் உயிருடன் சாகுவோர்!
அவர்களே தேசம்என்றும்,
உடைமை எலாம் அவர்க்கே என்றும்.
உங்கள் அழிவில்தான்
அவர்கள் வாழ்வு துளிர்விடுக என்றும்,
அதிகாரத்தை ஏந்தவேண்டியோர்
அவர்களேதாம் என்றும்
ஊரும் நாடும் காடும் மலையும்
எங்கும் முழங்கி எம்மவர்க்கு உணர்த்தி
நாங்கள் படையுடன் நடந்து வருவதால்... ...

ஓ! கொலைக் கும்பலே! சுரண்டல் கூட்டமே!
உங்கள் பார்வையில், உங்கள் மொழிகளில்
நாங்கள் தேசப்பகைவர்கள்தாம்!
ஐயமே இல்லை!
நாங்கள் உங்கள் தேசப்பகைவர்கள்தாம்!

எது. ஆம், 'இன்னும் உண்மைத் தமிழர் பல்லாயிரம் பேர் உளர்; எனவே தமிழ் சாகாது'' என இப்பொழுது நான் நிறைவுறுகிறேன் ஆனாலும் இன்றுள்ள தமிழ்க் குமுகாயத்திலே நான் காணும் நைந்த தமிழர் நிலை, மொழிச் சீர்கேடுகள் ஆகியவற்றை எண்ணுந்தோறும், என்னுள்ளத்தில் ஏதோவொரு மூலையில் வலிக்கிறது. வடமொழியும் ஆங்கிலமும் கலந்து, அழகு கெட்டுப் போன என் மொழியினைப் படிக்குந்தோறும், கேட்குந்தோறும். நான் செய்ய வேண்டிய பணி தான் யாது? தமிழ் படிப்போன் எள்ளி நகையாடப்பெறும் நிலை இன்று ஏற்பட்டுளதே! என் செய்வேன்?

— **தமிழ்ச்சிறுவன் க. சுந்தரன்**, சொக்கிகுளம், மதுரை-2.

0:676: ஐயா

தனித்தமிழ் பரப்பிடத் தென்மொழி வழியே
முனைந்து பல் லாக்கம் முடித்திடும் கோவே;
பண்டைய புலவர்போல் பாவன் மையினால்
தொண்டுசெய் திடுநுந் திறத்தினிற் கொப்பார்
யாருளர் என்றால் ஒருவரு மிலையே;
பாரினில் இற்றை நிலையறி வேனே;
ஆயினும்,
ஆசிரிய உரையில் அரசியல் கலந்து
பேசிடும் வேலையில் கூசிடும் படியே
இருந்திடல் நன்றோ? தொன்மொழி ஆய்வும்
கனிச்சுவைப் பாக்களின் கவினுறு நேர்த்தியும்
தனித்தன் மையோடு மிளிரும் போதுநும்
ஆசிரிய உரையில் அரசியல் வாடை
'நாச'மாய் அடித்திடல் கண்டேன்
தண்டமிழ்ப் புலவிர்! தக்கன செய்வீர்.

— **நட. இராசேந்திரன்**, புதுப்பேட்டை, (தெ. ஆ)

0:677: அன்புள்ள ஆசிரியருக்கு, வணக்கம். தென்மொழி (சுவடி 16; ஓலை 1) இதழில் நாவலர் சோமசுந்தரனாரைப் பற்றி எழுதியுள்ள கட்டுரையைப் பார்க்க நேர்ந்தது. அதில் நாவலர் தம் இளமைக் காலத்தில் ஒட்டு மீசையைப் புனைந்திருந்தார் எனக் குறிப்பிட்டுள்ளார். அஃது உண்மையன்று. அவர் எப்போதும் ஒட்டு மீசை கொண்டிருந்தாரிலர். முதுமைக் காலத்தில் அவர் சிறிது குறுக்கி வெட்டிக் கொண்டாரே யொழிய இளமைக் காலத்தில் அவருக்கிருந்தது இயற்கையான மீசையே. அவருடன் பழகியவன் என்ற முறையில் இவ்வுண்மையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

— **திருமுடி. நா. சேதுராமன்**, முன்னாள் நகரவைத் தலைவர், புதுவை.

0:678: பெரும் மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, இந்த இனத்திற்கு விடிவே கிடையாது. இன்றைய ஆட்சியில் தமிழ் இனம், தமிழ் மொழி. திசை மாறிப் போய்க்கொண்டு இருக்கின்றன. தமிழ் இனத்தை ஒருங்கிணைந்த மண்டபமாக—இந்த உலகத்திற்கு ஒளி காட்டும் விடிவெள்ளியாக மாற்ற வேண்டிய கட்டாயம் தங்களுக்குத் தான் உள்ளது. — **மு. செயக்கொடி**, காடம்பாறை மின் நிலையம்.

0:679: சங்கப் பாவல! சங்கப் பாவல!
தங்கு பெரும்புகழ் தாங்கு நும்மடி

வாழ்த்தி வணங்குகம், வாழிய வாழிய!
காழ்த்த தமிழின் கழகம் கண்ட
மதுரையம் பதியின் பல்கலை மன்றின்
முதுகலைத் தமிழில் முகிழ்த்தது புதுமைக்
'கவிதை'. அதனால், கன்னித் தமிழின்
செவிய சிறப்புச் சிறுகும்; அதனொடு
பண்ணிய தமிழே பயின்று "புலவர்"
நண்ணும் நிலையும் நலிந்தது அயலாம்
ஆங்கில மொழியில் அடையும் அடிமை
ஈங்கும் உற்றதே! இனிஅது வரவே
தக்க வினைகளைத் தாழ்வறப் புரிய
மிக்க வாற்றல் மேம்படு நும்மடி
தொழுது வாழ்த்துகம் பெரியோய்
கழுவுக தமிழின் கறைகளை விரைந்தே!

—சுப. குப்புசாமி, வை. வீராண்டான்,
முத்தமிழ் மன்றம், அரிமணம்.

**0:680:** இனிய தமிழ்ப் பாவலரேறு அய்யா அவர்கட்கு என் இனிய கைகூப்பு வணக்கங்கள் பல. கடந்த 14-7-78 மாலை ஏழு மணி அளவில் ஈரோட்டில், பொருள்வளம் நிறைந்த பொதுவுடைமை யாளர் முன்னின்று நடத்திய **"கல்பனு"** வாசகர் வட்டம் என்ற அமைப்பில், தமிழறிவுக் கல்வெட்டுப் புலவர்களும் மற்றும் வட மொழிச் சார்புள்ளோர் சிலரும் பேசினர்கள். அந்தத் திங்களிதழின் ஆசிரியர் **செயகாந்தன்** மேடையில் மதிநிறைந்தவராக இல்லாது, கண் ஆடியைத் தலைமேல் தூக்கி வைக்கவும், கீழ் விடவும் சிறுமைத் தனமுள்ளவராக, தோற்றத்தாலும் செய்கையாலும் இருந்தார். பண்டுவர் குருமூர்த்தி அந்த இதழில் தமக்கியைபில்லாத பொது மக்கள் போற்றுத விளங்காதவற்றைக் கூறி ஆசிரியரின் தவறு களைச் சுட்டிக் காட்டினர். அடுத்துப் பேசிய வேலா அரசமாணிக்கம் பேசும்போது இதழின் கண் அமைந்த மொழிக் கலப்பைச் சுட்டிப் பேசினர். அவர் சில பக்கங்களைச் சுட்டிக்காட்டி, இம்மாதிரி மொழிக் கலப்பு நடையை விட்டுத் தூயதமிழ் எழுதவில்லை என்று லும் ஓரளவு நடைமுறைத் தமிழிலாவது எழுதுவது நலம் பயக்கு மென்றும் இம்முறை நம் தமிழ்மொழி வளர்ச்சியைக் குன்றச் செய்யும் என்றும் கூறினர். அடுத்துப் பேசிய செயகாந்தன் வெறிபிடித்த மாந்தனைப் போல், எனக்கு எத்தனைப் புகழ் உண்டு என்றும் நான் புகழின் உச்சாணிக்கே சென்று விட்டேன் என்றும், இனி நான் புகழ் தேடவும் வேண்டியதில்லை என்றும், யாரும் தனக்குத் தக்காரும் மிக்காருமில்லை யென்றும் தன்னைத்தானே தருக்கிக் கொண்டதும் அல்லாமல் எத்தனையோ தனித்தமிழ் பேசியவரெல் லாரும் என் காலடியில் கிடக்கின்றனர்கள் என்றும் உளறிக் கொட்டினர். மலத்தை ஈக்கள் மொய்ப்பது போல் மாசுடையாரும் அவர்தம் இதழும் என்றொழிந்து தமிழ்த்தாய் மாசுமருவற்ற தேனுக மணம் கொள்வாளோ? —**குமர. நடவரச ஈவப்பன்**, சித்தோடு